புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது. உ ஆரம்பமானது: விரோதி வூ (1889) ஆவணிமீ உஅஉ

"எனைத்தானு நல்லவை கேட்க அனைத்தானும், ஆன்ற பெருமை தரும்"

THE SAIVA PRAKASA PRESS

# இந்துசாதனம்

(SUPPLEMENT TO THE HINDU ORGAN.)

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"என் கடன் பணிசெய்து கிடப்பதே"

"சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேக்கச்
செம்பூத்த நீக்கமாக மக்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருளக னீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோ ராகப்
பேர்பூத்த சிவானந்தத் தனிநூ னோக்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானா ரந்த
வார்பூத்த வரிவிச்சை தொழிலென் றோதி
மதம்பூத்த விநாயகன்றன் வணக்கி வாழ்வாம்"

"வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம ரனாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

புத்தகம்—சஎ } யாழ்ப்பாணம்:— யுவவூ ஆனிமீ ௩௧உ ( 1935 ஜூலை 15 திங்கட்கிழமை. ) { இலக்கம்—உஎ

## கிறிஸ்தவ குருவும் ஆத்மாவின் விலையும்.

### ஒரு ஆத்மாவுக்கு 25 ரூபாவா? பரமண்டலம் சேர்க்கும் உபாயம்!

### சேலம் ஜில்லாவில் "பிஷப்" ஆரவாரம். தீண்டாதார் மத்தியில் கோலாகலம்.

["ஆனந்த விகடன்."]

1900 வருஷங்களுக்கு முன் ஜெருஸலம் என்னும்ஊரில் ஏசு என்னும் பெயர் கொண்ட ஒரு பைத்தியகாரர் இருந்தார். உலகத்தையே சீர்திருத்திவிட வேண்டுமென்று அவர் ஆவல் கொண்டார். பாவத்தில் உழலும் மக்களைப் பரமண்டலத்திலுள்ள பிதாவினிடம் சேர்க்கவேண்டுமென்பது அவருடைய ஆசை; கொலை, களவு, கோபம், பொருமை, சண்டை, சச்சரவு ஆகிய வைகளையெல்லாம் மனித சமூகத்திலிருந்து போக்கடித்துவிட வேண்டுமென்பது அவர் விருப்பம் உலகிலுள்ள மனிதர்களெல்லாரும் சகோதரர்களைப்போல் வாழவேண்டுமென்பது அவர் கண்ட கனவு

மாந்தர்களைப் பாவத்திலிருந்து கரை சேர்ப்பதற்காக அவர் வாழ்நாளெல்லாம் பாடுபட்டார். கடைசியில் அதே நோக்கத்திற்காக அவர் சிலுவையில் அறையும் பட்டு மாண்டார்.

அப்படிப்பட்ட ஏசுகிறிஸ்துவானவர் பரமண்டலத்திலிருந்து புறப்பட்டு வந்து தற்சமயம் சேலம் ஜில்லா மேட்டுப்பாளையம் என்னும் கிராமத்தைப் பார்ப்பாரானால், தாம் செய்தது எவ்வளவு பெரிய தவறு என்பதை உணர்ந்தே தீருவார்.

ஆத்மாக்களைக் கரை சேர்ப்பதற்கு நமது சேலம் பிஷப் துரை கண்டுபிடித்திருக்கும் புதிய வழி என்ன தெரியுமா? ஆத்மாக்களை விலைக்கு வாங்கிவிடுவது தான். அப்படி வாங்குவதில் அவர் ஔதாரித்தனமாய்ப் பணத்தை வாரி இறைத்து விடுகிறார் என்று நீங்கள் நினைக்கவேண்டாம் தீண்டாத ஆத்மா ஒன்றுக்கு அவருடைய விலைமதிப்பு ரூபா 25 தான். ஒருவேளை 'உயர்ஜாதி' ஹிந்து ஆத்மாவுக்கு அவர் அதிக விலைமதிப்புப் போட்டாலும் போடலாம்.

இந்த வியாபாரத்தில் அவர் நடத்தியிருக்கும் முதலாவது பெரிய பேரம் மேட்டுப்பாளையம் என்னும் கிராமத்தில் நடந்தது.

அந்தக் கிராமத்திலுள்ள ஹரிஜனங்களின் ஆத்மாக்களைப் பாவத்திலிருந்து மீட்டுப் பரம பதத்தில் சேர்க்கவேண்டுமென்னும் தாபம் நமது பிஷப் துரைக்கு உண்டாகிற்று உடனே அவர்களிடம் சென்று, ஹிந்துமதத்தைச் சேர்ந்தவர்களின் ஆவிகள் எப்படி ஹிந்து கோயில்களின் ஸ்தூபிகள் வழியாக நரகத்துக்குப் போய்த் தலைகுப்புறத் தடாலென விழுகின்றனவென்றும், ஆனால் கிறிஸ்துவமதத்தைச் சேர்ந்தால் எப்படி அதே ஆத்மாக்கள் மாதாகோவில்களின் சிலுவை வழியாக வெளியேறிப் பரமபதத்தில் ஜம்மென்று குதிக்கின்றனவென்றும் சாங்கோபாங்கமாக எடுத்துச் சொல்லப்பட்டது. ஹிந்துமதத்தைச் சேர்ந்திருந்த காரணத்தினால் எவ்வாறு ஆழ்வார்கள், நாயன்மார்கள், சங்கரர், இராமாநுஜர், துக்காராம், சைதன்யர், தாயுமானவர், பட்டணத்தார், இராமக்கிருஷ்ணர், விவேகானந்தர், தயானந்தர், திலகர் முதலியவர்களெல்லாம் இன்று நரகத்தில் கிடந்து உழல்கிறார்களென்றும், அதற்கு மாறாக எப்படி எட்டாவது ஹென்ரி, எலிஸெபெத் ராணி முதல், கிளைவ், ஹேஸ்டிங்ஸ், ஜெனரல் நீல் துரை வரையில் பாவ மன்னிப்புப் பெற்ற கிறிஸ்தவர்கள் அனைவரும் பரமபதத்தில் நித்யானந்தத்தை அநுபவித்துக்கொண்டிருக்கிறார்களென்றும் விவரிக்கப்பட்டது.

இந்த விவரங்களைச் சும்மா சொன்னால் மட்டும் போதுமா? அவை உண்மைதானென்று கேட்டவர்களுக்கு நம்பிக்கை பிறக்கவேண்டுமல்லவா! அதற்கு ஒத்தாசையாயிருக்கும் பொருட்டுக் குடும்பம் ஒன்றுக்கு ரூபா 25 வீதம் பணமுங் கொடுத்தாங்க, பிஷப் ஐயா.

பணம் கொடுப்பதற்கு ஏதாவது நிபந்தனை போட்டாரென்று நீங்கள் எள்ளளவும் சந்தேகப்படவேண்டாம். "பணம் வாங்கிக்கொண்டால் கிறிஸ்துவராகவேண்டும்" என்று அவர் வற்புறுத்தினாரோ? கிடையவே கிடையாது. சும்மா ரூபாயைத் தூக்கிக் கொடுத்துவிட்டார், அவ்வளவுதான்!

ஆனால் நமது ஏழை ஹரிஜனங்கள் ரூபா 25 சுளை சுளையாகக் கையிலே கண்டதும், "இதென்னடா இது! நம்ம மதத்துச் சாமிகளெல்லாம் நம்மிடமிருந்து பணம் பிடுங்கப் பார்க்குது ஆனால் இந்தப் புது மதத்திலே சாமி பணம் கொண்டாந்து நமக்குக் கொடுக்கிறது. பணங் கேக்கிற சாமியைவிடப் பணங் கொடுக்கிற சாமிதான் தேவலை" என்று நிர்மானித்து, கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்து விட்டார்கள்.

அந்தனாரிலே, பணம் வாங்கிக்கொண்ட பிறகும் பழையமதத்திலே பற்றுடனிருக்

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

## றிச்சாட்ஸ்—பாட்லெட் குடும்ப விவகாரம்.

### மைத்துனிக்குஎழுதியகடிதம்: அதனால்மானபங்கம் 1000 ரூபா நட்டஈடு வேண்டுமாம்.

### பழைய உத்தியோகத்தர்களின் வழக்கு. வழக்குத் தொடர்வதே பரவணி வழக்கமாம்!

—:*:—

(நமது நிருபர்)

நீர்ப்பாய்ச்சற்பகுதி என்ஜினியராயிருந்து தற்போது இளைப்பாறி யாழ்ப்பாணம் ஸ்ரேஷன்றோட்டில்வசிக்கும் மிஸ்ரர் ஜோர்ஜ் செல்லையா பாட்லெட் என்பவர் தமக்கு மானபங்கம் விளைக்கக்கூடியதாக ஓர் கடிதம் எழுதியமையால் மானநட்டமாக 1000 ரூபா கொடுத்தல்வேண்டுமென மிஸ்ரர் P. B T. றிச்சாட்ஸ்என்பவர் யாழ்ப்பாணப் பொலிஸ் நீதிஸ்தலத்தில் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்.

வாதிக்காக மிஸ்ரர் W. D. கைல்ஸ், மிஸ்ரர் J. K. ஆர்னல்டு என்பவர்கள் ஏற்பட்டனர். பிரதிவாதிக்காக ஸ்ரீ வை. துரைசுவாமி, ஸ்ரீ S. R. கனகநாயகம், ஸ்ரீ K. கனகசபை என்பவர்கள் ஏற்பட்டனர்.

மிஸ்ரர் P. B. T றிச்சாட்ஸ் என்பவர் மலாய்நாட்டில் உத்தியோகம் வகித்து இப்போது இளைப்பாறிச் சங்குவேலியில் வசிப்பவராகும். அவருடைய நமையன் மனைவிக்கு மிஸ்ரர் பாட்லெட் ஓர் கடிதம் எழுதியனுப்பினார். அதில் "வழக்குகள் நடத்துவதும், கோடுகளுக்குத் திரிவதும் மிஸ்ரர் றிச்சாட்ஸினுடைய குடும்பத்தின் பரவணியான வழக்கம்" என்னும் கருத்துப்படக் குறிப்பிடப்பட்டிருந்ததாம். இது சுத்தப் பொய், காரணம் இல்லாது வேண்டுமென்று தம் மைத்துனி தன்பால் கொண்ட மதிப்பைக் குறைக்கும்படி எழுதப்பட்டதாகும் என்று வாதி முறைப்பாடு கொடுத்தார்.

தான் அக்கடிதத்தை எழுதியது மெய்; ஆனால் அதனைத் தன் சகோதரிக்கு எழுதினதாகவும், தன் சகோதரிக்குப் புத்திமதி புகட்டுதற்காகவே அக்கடிதத்தைத் தான் எழுதியதாகவும் தான் கேவலம் பொருமை அழுக்காறு என்பனவற்றால் உந்தப்பெற்று இதனை எழுதவில்லை என்றும் பிரதிவாதி எதிர்வாதம் புரிகின்றார். இன்னும் இக்கடிதத்தை — தான் தனது சகோதரிக்கு எழுதிய கடிதத்தை —வாதி கோட்டுக்கு இழுக்க ஆவசியகம் இல்லை என்றும் பிரதிவாதி கூறுகின்றார்.

விசாரணையின்போது வாதியான மிஸ்ரர் றிச்சாட்ஸ் பின்வருமாறு சாட்சியம் பகர்ந்தார்.

"எனது வயது 62. நாங்கள்— அதாவது நானும் பிரதிவாதியும் சுற்றத்தவர்கள். பிரதிவாதி தாம் செய்தமை பிழையென்பதை ஒத்துக்கொண்டு மன்னிப்புக் கேட்பாரானால், நான் இது விஷயத்திற் சமாதானமாகப்போக ஆயத்தமே:

"1920-ம் ஆண்டு நான் மலாய்நாட்டில் இருந்து வந்தேன. அதுவரைக்கும் குத்தகைக்காரரே என் காணிபூமிகளைப் பார்த்து வந்தனர். நான் யாழ்ப்பாணத்திற்கு வந்து கமத்தொழிலில் ஈடுபட்டேன். நான் என் காணிபூமிகளில் கமஞ்செய்வது, இதுகாறும் குத்தகை வகித்திருந்தவர்களுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் எனக்குத் தொல்லை கொடுத்துக்கொண்டு வந்தனர். அவர்கள் எனது பயிர்க்குச் சேதம் விளைத்தனர். நான் இதுவிஷயமாய் மாகாணத் தலைவர்க்குப் பெட்டிசம் அனுப்பினேன். அவர் என் காணிபூமிகளை வந்து பார்வையிட்டு என்னை வழக்குத் தொடரும்படி கூறினர்.

"எனது மைத்துனி என்மீது நல்ல அபிப்பிராயம் கொண்டிருந்தவராகும். இந்தக் கடிதத்தினால் எனக்கு மானபங்கம் நேர்ந்திருக்கிறது.

"மானநட்டமாக எனக்குப் பணங் கிடைக்குமாயின் நான் அதனை செயின்ற் ஜோன்ஸ் கல்லூரிக்கு அளித்துவிடுவேன்."

இதன்பின் வழக்கு 21-8-35 இற்குத் தவணையிடப்பட்டிருக்கிறது.

### மரணமடைந்தபின் உயிரளித்தல்.

கலிபோர்னியாவில் ஹொலிவுட் வாசியான டாக்டர் ராலப் வில்லியர்ட் மரணமடைந்தோரை உயிர்பெறச் செய்ய ஓர் நூதன முறை கண்டுபிடித்திருக்கிறாராம். இவர் முதலாவதாக ஓர் இறந்த பன்றியைத் தாம் கண்டுபிடித்த முறைப்படி சிகிச்சை செய்ததில் அது மீண்டும் உயிர் பெற்றது. முதலாவதாக அந்தப் பன்றியின் தேகத்தில் ஸோடியம் சிட்டரேட்டை ஊசி வழியாக அவர் செலுத்தினர். பின்பு அதைச் சீதளமுண்டாக்கும் ஓர் அறையில் வைத்துக் கரியமில வாயுவை (கார்பண்டை ஆக்ஸைட்) அந்த அறையில் ஓர் குழாய் வழியாகச் செலுத்தினர். மூன்று தினங்களுக்குப் பின் அந்தப் பன்றிக்குச் சிறிது உயிர்ப்புத் தோன்றிற்றும்.

# அருந் தமிழ்த் தாயின் பெருந்தவப் புதல்வன்.

(சே. பெருமையினர்)

"செந்தமிழ் நாடெனும் போதினிலே
இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே"
—(பாரதி)

இன்பத் தேன்; அன்புத் தேன்; செந்தமிழினின்றும் சிந்துகின்றன. வாருங்கள்: அள்ளிப்பருகுங்கள்: ஆநந்தங் கொள்ளுங்கள்: எனப் பாரதியார் ஆற்றிய பணி கண்டு சிந்தித்து மகிழ்தற்குரியது; இச்செந்தமிழ் நாட்டில், செந்தமிழ்ச் செஞ்சொற் கவியின்பங்களை அள்ளிச் சொரியும் ஆர்வமிக்க பாவலரும், அவ்வின்பத்தால் அன்பளாவி, இன்பமொழிகளால் ஏற்றியும் போற்றியும், மாரிபோல் வழங்கியும், ஆதரித்து வந்த புரவலரும் மலிந்து பொலிந்து, தமிழகத்தின் ஒளியாய் மிளிர்ந்தனர். அன்புக்கனிவால் நெஞ்சுருகப்பாடும் கவித்துவம் பெற்ற பாவலரும் தங்களை ஆதரித்தோரைத் தாமியற்றிய காப்பியங்களில் ஆங்காங்கு குறிப்பிட்டிருப்பதையும், குறிப்பிட்டிருக்குமிடத்தின் பெருமையையும் நுணுகி ஆராய்வோர், புரவலரின் பெருமையையும், பாவலரின், "தாளுண்ட நீரைத் தலையாலே தான் தரும் தெங்கின்' தன்மையை ஒத்த செய்நன்றி அறிதலையும் பரக்கக் காணலாம். உதாரணமுகத்திற்காக,

"மண்ணவர் வறுமை நோய்க்கு
மருந்தெனச் சடையன் வெண்ணெய்
அண்ணறன் சொல்லேடன்ன
படைக்கல மருளினானே"

[மண்ணுலக மாந்தரினது வறுமைநோய்க்கு மருந்தென விளங்கிய சடையப்பவள்ளலினது சொல்லுக்கு நிகராகக் கௌசிகன் கொடுத்த அத்திரங்கள் இருந்தன.]

எனக் கவியரசர் கம்பரின் தலையாய அன்பு வெள்ளிடைமலைபோல் தெள்ளிதில் புலனாகின்றதல்லவா? தினைத்துணையானும் பனைத்துணையாய்க் கொள்ளும் பெருந்தகையார் வறுமையின் பகைவரான வள்ளலாரைத் திங்களுக்கு உவமிக்க வெண்ணி

"வண்ணமாலை கைபரப்பி
உலகைவளைத்த இருளெல்லாம்
உண்ண எண்ணித் தண்மதியத்து
உதயத் தெழுந்த நிலாக்கற்றை
விண்ணும் மண்ணும் திசையனைத்தும்
விழுங்கிக்கொண்ட விரிகன்னீர்
பண்ணை வெண்ணெய்ச்சடையன்
தன்புகழ் போலெங்கும்பரந்தளவால்"

[பாரெங்கும், தண்கதிர்த்திங்கள், இருளை விழுங்கி ஒளிர்ந்தது; வள்ளலின் வறுமையகற்றுந் திறனை கனிவிளக்குகின்றது. ஒளிவரவரப் பிரகாசிப்பது போல் சடையன் புகழும் வளர்ந்தோங்கியது. சாதி, குலம் பாராது வழங்கின தன்மை, நாடென்றும் காடென்றும் பாராது ஒளி வீசியதை ஒத்தது]

எனக்கூறிய இக்கவியின் கவிநயங்கருதத்தக்கதாகும்; கண்டு விரிக்கிற் பெருகுமென அஞ்சி "அருந்தமிழ்த்தாயின் பெருந்தவப் புதல்வன்" யாரென அவன் சரிதையை நோக்குவாம்.

முன்னொருபொழுது, பல்லவராஜபத்தையாண்ட ஓர் அரசனுக்கு அருந்தவப்பயனாய் அவன் அன்பிற்குரிய வைப்பாட்டி வயிற்றில் நந்தித் தொண்டைமான் என்னும் ஓர் ஆண் மகவு பிறந்தது. அம்மகவு பாலனாகிக் குமாரனாய் விளங்கினன். இவன் இளமையில் குணவிசேஷமுடையவனாய் யாவரும் மெச்சும்படி நடந்தான். இவன் தாய் சொல்லைத் தட்டாத தனயனாயும், தந்தையின் பால் தலையாய அன்பு உடையவனாயும், உறவினரிடம் உள்ளன்பு கொண்ட உத்தமனாயும் விளங்கினன். அன்றியும் காட்சிக்கு எளியனாயும், மாட்சிக்கு உரியனாயும், ஆபத்து வந்த காலத்து அஃது தளம்பாத் தீரனாயும், பகைஞரின் அருந்திறலை ஒழிக்கும் பெருவிறலனாயும், அண்டினோரை அணைத்துக் காக்கும் அன்புடையோனாயும், தமிழன்னையின் தவப்புதல்வனாயும், இருவலரின் புரவலனாயும், 'நீதியன்,' 'கீர்த்திமான்' எனப் புகழத்தக்கவனாயும் விளங்கினன். இவன் சற்குணங்களில் ஈடுபட்ட இவன் தந்தை மிகவும் மகிழ்வெய்தி இவனுக்கே அரசுரிமையைப் பட்டத்துத் தேவியின் பட்டத்துக் குமாரனையும் மதியாது கொடுத்தனன். நந்தித்தொண்டைமான், தான் பெற்ற அரசை,

"முறை செய்து காப்பாற்று மன்னவன்
மக்கட்கு இறை யென்று வைக்கப்படும்"

என்னும் நாயனார் திருவாக்குக்கமைய நீதி பரிபாலித்துக் காப்பாற்றினன். 'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே" என்னும் திருவாய்மொழிக்கியைய வாராது வந்த மாமணிபோல் குடிகளைக் கண்ணெனக் கருதினன்.

"தொட்டிலிற் பூண்டகுணம் சுடுகாடு மட்டும்" என்றாற்போல, சிறுபராயத்திலே தமிழன்னையின்பால் ஏற்பட்ட கவர்ச்சியானது அரசனாய்வந்த போது தேய்பிறை பூரணசந்திரனாற் போலாயிற்று பாடிவரும் பாவலருக்குப் பாராது வழங்கினன். இரவலர்க்கு இல்லையென்றது ஈந்துவந்தனன்.

"ஆடெரிபடர்ந்தகோடியாடுப்பில்
ஆம்பிபூப்ப தேம்பசியுழல
இல்லிநூர்ந்தனள் பொல்லாவறுமுலை
சுவைதொறும் சுவைதொறும் பால்காணு
குழவி தாய்முகநோக்க [ல்
மனைவி என்முகம் நோக்க யானும்
நின்முகம் நோக்கி வந்தனன்"

என்னும் பாவால் விளங்கக்கூடிய கொடிய வறுமை வாய்ப்பட்ட புலவோர்கள் குதூகலத்துடன் அறுசுவை புண்டி உண்ணும் தன்மையை எய்தினரன்றோ. இவனின் ஆதரவை அனுபவித்திலரோ? இவன் தமிழின்பால் வைத்த அளவிலா அன்பு. இவனின் ஈகைக்குப் பாகியுபகாரமாகப் புலவர்கள், உன்னி உன்னி உவத்தற்குரிய தெள்ளுற்ற தமிழமுதில் திங்களிச் செய்யுட்களைப் பாடிப் பரிசும் பெற்றனர். என்னே!

—(வரும்)

# பள்ளகுல வைப்பாட்டியால் வந்த வினை?

## அல்வாயில் துப்பாக்கிச் சூடு! அதனைக் கண்ட பள்ளரின் ஓட்டம்!

### விருந்தையிற் கிடந்த பிணம் வெளியேபோகக் காரணமென்ன?

(நமது நிருபர்.)

சென்ற 9–7–35 இரவு அல்வாயில் வடிவேலு என்னும் வேளாளர் சோமன் என்னும் பள்ள குலத்தவனொருவனைச் சுட்டுக் கொன்றார் என்ற செய்தி ஏற்கெனவே இப்பத்திரிகையில் வெளிவந்துள்ளதாகும். இதன் விபரம் வருமாறு:—

சுப்பர் வடிவேலு மலாய் நாட்டிற் புகைரத ஸ்தானத் தலைவராயிருந்து இளைப்பாறி அல்வாய் வடக்கில் வசிப்பவராவர். இவர் பள்ளிபொருத்தியை வைப்பாட்டியாக வைத்திருக்கின்றார் என்றும், இது பள்ள குலத்தவர்க்கிடையே மிகுந்த பரபரப்பை உண்டாக்கியதென்றுந் தெரிகிறது.

சென்ற 9–ம் தேதியிரவு மேற்படி பள்ளிக்குச் சகோதரன் முறை பூண்டுள்ளவனை நாகன் சோமன், ஆழ்வான் கணபதி, சின்னன் குமாரசுவாமி என்பவர்களுடன் கத்திகள் பொல்லுகள் என்னும் ஆயுதங்களை ஏந்தி வடிவேலுவின் வளவிற்குச்சென்று "வாடாவெளியில், எங்கே அவன்? (வைப்பாட்டி" என்று ஆக்கிரமித்தனராம்! அப்போது எதிரி வீட்டிற்குள் இருந்தாராம். பயத்தினால் அவர் அறையொன்றிற்குள் ஒளித்திருந்தார். இதற்கிடையில் ஸ்ரீ வடிவேலுவின் சொந்த மனைவி வெளியே வரப் பள்ளர் அவளைத் தள்ளிவிட்டு "பார், உவனைக் கொலை செய்கிறோம்" என்று வீட்டிற்குள் நுழைந்தனராம் தனதுநிலை ஆபத்தாக முடியப்போவதை உணர்ந்த வடிவேலு ஆங்கிருந்த துப்பாக்கியை எடுத்துச் சோமனை நோக்கிச் சுட்டாராம். உடனே குண்டுபாய, சோமன் விருந்தையில் விழுந்து இறந்தான் என்றும், இதனைக் கண்ட பள்ளர் ஓட்டம் பிடித்தனர் என்றும் சொல்லப்படுகிறது. இதன்பின் எதிரி வெளியே வந்து ஆகாசத்தை நோக்கி இருமுறை சுட்டாராம். இதன்பின் பருத்தித்துறைப் பொலிஸ்தானத்துக்கு அவர் சென்று தமது துப்பாக்கியையும் ஆங்கு ஒப்புவித்துச் சரண் அடைந்தார். இதற்கிடையில் பள்ளர்கள் மீண்டும் ஸ்ரீ வடிவேலுவின் வீட்டுக்குச் சென்று விருந்தையிற் கிடந்த பிணத்தை இழுத்து, வீட்டுக்கு முன்னால் உள்ள ஒழுங்கையிற் கிடத்தினர் என்று சொல்லப் படுகிறது.

பொலிஸ் நீதிபதி மிஸ்டர் பெலிக்ஸ் போல் இது சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று விசாரணை புரிந்தார்.

எதிரி இப்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

# அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8ம் இலக்கச் சட்டத்தின்படி லைசென்சுபெற்ற அடைவுபிடிக்கும் கோட்டடி மா. கு. தெண்டாயுதபாணி என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12ம்பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

| இல. | திகதி | ரூபா. | ச. | |
|---|---|---|---|---|
| J 2089 | 29 | 300 | | S P கந்தையா ஆனைப்பந்தியடி இரண்டுபட்டு அறுகுக்கொடி 1 |
| | மே மீ 1934 | | | |
| 2893 | 3 | 7 | | ச முத்துப்பிள்ளை கொட்டடி குப்பிக்கடுக்கன் 2 |
| 2924 | 5 | 10 | | ம மனுவல் நாவாந்துறை கல்தோடு 2 |
| 2964 | 7 | 94 | 50 | சி கந்தவனம் மண்டதீவு பொன் கொடி 1 |
| 3056 | 12 | 8 | | மு மு அப்துல் கறீம் சோனகதெரு அறுக்குத்து 6 |
| 3144 | 16 | 25 | | அ மூகம்மது லெவ்வை சோனகதெரு அறுக்குத்து 1 குச்சி 3 காதப்பூ 1 மணிக்கோர்வை 2 |
| 3189 | 18 | 10 | | மு செயினுமுகம்மது சோனகதெரு அறுக்குத்து 6 |
| 3294 | 22 | 15 | | தி நட்சேத்திரம் நாவாந்துறை குப்பிக்கடுக்கன் நாறு |
| 3435 | 28 | 7 | | இ ஆறுமுகம் நாவியடி மோதிரம் 1 |
| 3456 | 29 | 9 | | மு பேரம்பலம் கொட்டடி மோதிரம் 1 |
| 3510 | 31 | 15 | | வா மு அபூபக்கர் சோனகதெரு கல்மோதிரம் I |
| | ஜூன் மீ 1934 | | | |
| 3619 | 5 | 50 | | வே இராமலிங்கம் நவாலி சிறுகாப்பு 4 |
| 3667 | 6 | 500 | 03 | ச கனகரெத்தினம் தெல்லிப்பழை பெரிய பதக்கத்துடன் சங்கிலி 1 வயிரக்கல் [தோடு 2 |
| 3688 | 6 | 12 | | மு வேலுப்பிள்ளை மயிலிட்டி அச்சரக்கூடு 1 |
| 37:0 | 7 | 30 | | மீ மீராமுகைதீன் சோனகதெரு மூன்றுபட்டு மணிக்கோர்வை 1 |
| 3736 | 9 | 128 | | L P இராசசூரியர் மானிப்பாய் பெண்டாடீன சவடி 1 |
| 3758 | 10 | 330 | | கு முருகேசு புங்குடுதீவு அச்சரச் சங்கிலி 1 அச்சுக்காப்பு 4 செ காப்பு 2 |
| 3793 | 11 | 18 | | S M சுல்தான் முகைதீன் சோனகதெரு மணிக்கோர்வை 1 |
| 3861 | 14 | 125 | | L P இராசசூரியர் மானிப்பாய் கல் அட்டியல் 1 |
| 3862 | 14 | 20 | | நீ யக்கோ நாவாந்துறை அரக்குடன்கூடு 1 |
| 3878 | 15 | 87 | 18 | சி நாகலிங்கம் கச்சேரியடி செ கொலுசு 2 |
| 3986 | 21 | 12 | | இ தம்பிமுத்து பூனகரி தோடு 2 குப்பி 2 |
| 4004 | 23 | 12 | | க கண்ணப்பு கொட்டடி கல்தோடு 2 |
| 4005 | 23 | 18 | | க முத்துப்பிள்ளை கொட்டடி குப்பிக்கடுக்கன் 2 சட்டுமணி 1 |
| 4008 | 23 | 10 | 50 | மோ அன்னமுத்து நாவாந்துறை சங்கிலி 1 |
| 4036 | 24 | 7 | | க பொன்னையா வண்மேற்கு கல்குச்சி 2 |
| 4052 | 25 | 80 | | கா கந்தையா மண்டதீவு செ காப்பு 2 |
| 4085 | 25 | 45 | | சி சதாசிவம் மண்டதீவு செ காப்பு 2 |
| 4164 | 29 | 10 | | S Joseph இளவாலை மோதிரம் 3 |
| 4197 | 30 | 13 | | கா காசிநாதர் மண்டதீவு கவுத்தோர் 1 |
| 4198 | 30 | 6 | | கா காசிநாதர் மண்டதீவு கல்குச்சி 2 |
| | ஜூலை மீ 1934 | | | |
| 4257 | 2 | 30 | | ச மீருலெவ்வை மரக்காயர் சோனகதெரு பூரான் அட்டியல் 1 |
| 4272 | 3 | 12 | | அ செல்வராசா நாவாந்துறை கல்தோடு 2 |
| 4275 | 3 | 36 | | L P இராசசூரியர் மானிப்பாய் பொண்டன் 1 |
| 4282 | 3 | 6 | | மீ முகம்மது சோனகதெரு கொப்பு 2 பின்கோக்கி 1 |
| 4283 | 3 | 100 | | M M மதார சோனகதெரு வேலைசெய்த முழுடலர் 1 |

விற்பனவு யுவவருஷம் ஆடிமீ 15உ (30-7-35) செவ்வாய்க்கிழமை 8 மணி தொடக்கம் மேற்பட்ட நகை மீறக்கூடிய மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்,
லைசென்ஸ் மேஸ்தர்.

(Mis 98 11 15-7-35)


தலைவலியுற்றபோது

# லிட்டில்ஸ் ஒரியெண்டல் பாம்

## தைலத்தை

நெற்றியிலும் கன்னத்திலும்

தேயுங்கள்!

தலைவலி உடனே மாறிவிடும்

அதுவுமன்றி இது இந்தியாவில் இந்தியர்களாலேயே செய்யப்படுவது.

இத்தைலமே எல்லாவற்றிலும் சிறந்தது.


(Y 53 31 1—1-12-35)

# அபின் வந்தது எவ்வாறு?

## பொலிசார் புகுத்தவில்லை; எதிரிவைத்திருக்கவில்லை. பின் வந்தது எப்படி?

## பிறக்ரர் கனகரெத்தினம் யோக்கியர்! சாவகச்சேரி வழக்கில் நீதிபதியின் தீர்ப்பு.

—— $ ——

சாவகச்சேரி அபின்வழக்கில், நீதிபதி திரு. K. ஆள்ளொ பிள்ளை அவர்கள் அளித்துள்ள தீர்ப்பின் சாரம் வருமாறு என்று ஒருவாறு அறிகிறோம்.

இவ் வழக்கு மதுபரிபாலனச் சட்டத்தின்படி தொடரப்பட்டதாகும். சாவகச்சேரி வாசியாயுள்ள இராமநாதர் கனகசபை என்பவர் ¼ இருத்தல் நிறைகொண்டுள்ள அபினைச் சட்டவிரோதமாகச் சென்ற 16-5-35இல் வைத்திருந்தார் என்று உதவிப் பொலிஸ்பரிசோதகர் மிஸ்ரர் A. I. வைமன் என்பவரால் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்.

எதிரி அபின் வைத்திருக்கிறார் என்பதை உளவாளிகள் மூலமாக பொலீஸ் உதவிப் பரிசோதகர் மிஸ்ரர் வைமன் அறிந்து, எதிரி கொழும்புப் புகைரதத்தில் குறித்த தினத்தன்று ஏறுவதற்காக நிற்கும்போது சிறையாக்க புகைரதஸ்தானத்துக்குச் சென்றிருக்கின்றார். போகும்போது வழியில் கொய்லொன் வங்கியில் உபபரிசோதகர் மிஸ்ரர் D. H R. A. கொறியாவையும் உடன் அழைத்துச் சென்றிருக்கிறார் என்று சொல்லப்படுகிறது.........

யாழ்ப்பாணம் புகைரதஸ்தானத்தில் எதிரியின்மடி சோதிக்கப் படும்போது கீழே ஏதோ வீழ்ந்த ஓர் சத்தம் கேட்டிருக்கிறது என்று பரிசோதகர்கள் தம் சாட்சியத்திற் கூறியிருக்கின்றனர். அது ஓர் அபின்பார்ஸல். இந்த அபின்பார்ஸல் யாருடையது? எதிரியினுடையதா? எதிரி தான் அபின் வைத்திருக்கவில்லையென்றும் அப்பார்ஸலைப்பற்றிய தகவல் தனக்கொன்றும் தெரியாது என்றும் அப்பார்சலை இப்பரிசோதகர்களே புகுத்தி வேண்டுமென்று தன்னைச் சிறைப்படுத்தினர் என்றும் கூறுகின்றார். இந்த அபின் பார்ஸலை எதிரி வைத்திருந்தாரா என்பது ஆராயப்படத்தக்கது. அவரது அன்றைய நடவடிக்கைகளைப் பற்றி அநேகர் சாட்சியம் கூறியிருக்கின்றனர். இவர் இத்தகைய இழிதொழில்களில் ஈடுபடக் கூடியவர் அல்லர், யோக்கியமானவர், கௌரவமானவர் என்று பொறுப்பு வாய்ந்த சிலர் சாட்சியம் கூறியிருக்கின்றனர். இன்னும் அன்றைய நடவடிக்கைகளில் இருந்து அவர் அபினை வைத்திருப்பரோ என்பது மிகவும் சந்தேகமே!

"இனிப் பரிசோதகர்கள் இவ்வபினைப் புகுத்தியிருப்பரோ? அதுவும் மிகச் சந்தேகமே. இவ்விரு பரிசோதகரும் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள். எதிரியின் மடியில் இருந்து இவ்வபினை எடுக்கவில்லை என்பதை அவர்கள் இருவருமே ஒத்துக்கொள்ளுகின்றனர். வேண்டுமென்று புகுத்தியிருந்தால் அவர்கள் மடியில்தான் அபின் இருந்தது என்று சொல்லியிருக்கலாம். இன்னும் அபினை எடுத்தவுடன் இது யாருடையது? என்று பரிசோதகர் வைமன் எதிரியைக் கேட்டிருக்கிறார். பரிசோதகர்களாலேயே அது எதிரியிடம் புகுத்தப்பட்டதென்றால் அக் கேள்வியை மிஸ்ரர் வைமன் அபின் எடுத்தவுடன் கேட்டிருக்கமாட்டார்.

"இனி ஓர் சத்தம் கேட்டது. எதிரியின் மடியைச் சோதிக்கும்போது அபின் அதற்குள் இருந்திருக்குமாயின் அது வேட்டிக்குள்ளால் கீழேவிழச் சத்தம் அவ்வளவாய்க்கேட்காது. எனவே இது விடயத்திற் புலப்படுகின்றது யாதெனில் எதிரியின் மடியை இப் பரிசோதர்கள் சோதிக்கும்போது யாரோ இவ்வபினைக் கீழே போட்டிருக்கிறார்கள் அன்றிப் பொலிஸ் பரிசோதகர்கள் புகுத்தவில்லை என்பதே. இப்பொலிஸ் பரிசோதகர்களின் சாட்சியத்தை நான் நம்பாமல் இருக்கமுடியாது. அவர்கள் பொறுப்புவாய்ந்தவர்கள்; அவர்கள் இப்படி அபினைப்புகுத்தி எதிரியைச் சிறைப்படுத்தியிருப்பரோ என்பது மிக மிகச் சந்தேகம்.

"இனி இது பிறக்ரர் ஸ்ரீ கனகரெத்தினத்தின் தூண்டுதலின் பேராலேயே நிகழ்ந்ததென்று சில ஆதாரங்களைக்காட்டி வாதம் புரிகின்றார் எதிரி. இவ்வழக்குச் சம்பந்தமாக ஸ்ரீ கனகரத்தினம் அவர்களுக்கு ஓர் தொடர்புமில்லையென்றே கூறுகிறேன். அவர் ஓர் யோக்கியமானவர்: ஜே. பி., யூ. பி. எம். ஆவர்; அப்படிப்பட்ட அவர் இதிற் சம்பந்தப்பட்டிருப்பார் என்று யான் எண்ணமுடியாது.

---

## மதிப்புரை.

நம் முன்னோர் அளித்த அருஞ்செல்வம் அல்லது இலங்கைச்சரித்திரமும் உலகசரித்திரமும் (முதற்பாகம்): இந்நூல், இலங்கையிற் பறங்கியர் வந்துசேர்ந்த காலமாகிய 1505-ம் ஆண்டுவரைக்கும் நிகழ்ந்த விசேஷ சம்பவங்களையும் இவ்விலங்கையில் வாழ்ந்த பிரதானமக்களின் வரலாறுகளையும், உலகத்திலுள்ள முக்கியமான நாடுகளின் சரித்திரத்தையும் அந்நாடுகளில் வசித்த பெரியார் வரலாறுகளையும் சுருக்கமாகக் கூறுவதாகும். இதன் பின்னர் 23 சித்திரப்படங்களும் 8 தேசபடங்களும் காணப்படுகின்றன. மிஸ்ரர் ஜி. ஸீ. மெண்டிஸ் (B. A., Ph. D) அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியுள்ள நூலின் மொழிபெயர்ப்பாகும். இதனைத்தமிழ் ஆருக்காத்திற்பயிலும் மாணுக்கர்க்குப் பயன்படும்படி நுட்பமாக மொழிபெயர்த்தவர் ஸ்ரீ சீ. சி இராமசுவாமி (M.A) என்பவர். பிரதிகள் 180 பக்கங்கள் வரையிற் கொண்டதாய்த் தெளிவாகவும் அழகுற நல்ல கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளன. பிரதியொன்றன் விலை சதம் 80. (அணு 13) பெறவிரும்புவோர் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலுமுள்ள பிரபல புத்தகசாலைகளிற் பெற்றுக்கொள்ளலாகும்.

---

நாவலன்: இது யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலிச் சைவாசிரியர் கலாசாலை மாணவர் சங்க வெளியீடாகும். "இன்னலாயினள் நன்னுதல்" ஆகுபெயர், சிவசத்துப் பொருள்கள், ழகர ளகர பேதம், கம்பரகவிநயம், முதலிய அரிய விஷயங்களும், பனம்பழப்பாட்டு, பொடிக்குறள், கருஉருவாதல், கதைப்பாட்டு முதலாம் நவமான கவிகளும் மேற்படி கலாசாலை மாணவரால் நுட்பமாக இயற்றப்பட்டுள்ளன. வெளியீட்டின் முகப்பிலுள்ள நடராசமூர்த்தி திருவுருவப்படம் போற்றத்தக்கது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், ஸேர் பொன். இராமநாதன், ஸ்ரீ.சு. இராசரத்தினம், ஸ்ரீ சி. சுவாமிநாதன் முதலாம்பெரியார்பிரதிமைப்படங்கள் இவ்வெளியீட்டில் இடையிடையே விளங்குகின்றன. சைவகலாசாலை, மாணவர் சங்க அறிக்கை என்னுமிவைகளைப்பற்றிய குறிப்புக்களும் எழுதப்பட்டுள்ளன. பிரதிகள் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அழகுற அச்சிடப்பெற்றுள்ளன.

---

பாஷை உற்பத்தியும் ஆயுள்வேத வைத்திய வரலாறும்: இது பல நூல்கள் ஆராய்ச்சிப்படி "வைத்திய ரசன" வன்னூர் பண்ணை ஸ்ரீ. ஆ. வைரமுத்து அவர்கள் எழுதியதாகும்.

---

கதிர்காமக்காதல்: இஃது நாக்கொடை ஸ்ரீ க. இராமச்சந்திரனவர்களால் கொழும்பு மெய்கண்டான் அச்சியந்திரசாலையில் அச்சிடுவித்துக் கதிர்காமத்தையன் அடியார்க்கெல்லாம் இலவசமின்றி உதவப்படுவது.

மேலே சொல்லப்பட்ட பிரதிகளின் பொருட்டு, அவற்றை எமக்கு அனுப்பிய ஆசிரியர்கட்கு நன்றி கூறுகின்றோம்.

## கிறிஸ்தவ குருவும் ஆத்மாவின் விலையும்.

——):×:(——

1ம் பக்கத் தொடர்ச்சி.

தவன் ஒருவனே ஒருவன்தான் மிஞ்சினன் என்று தெரியவருகிறது.

மக்களைக் கரை சேர்ப்பதற்கான முயற்சியில், ஏசுநாதர் இந்த சேலம் பிஷப் ஐயரவிடம் பாடங் கற்றுக்கொள்ள வேண்டுமென்று தெளிவாய்த் தெரிய வருகிறதல்லவா?

ஏசுநாதர் மட்டுமல்ல; இந்தியாதேச சரித்திரத்தில் நாம படித்திருக்கும் கஜினி முகம்மது என்ன, கோரி முகம்மது என்ன அவுரங்கஜீப் என்ன - இவர்களெல்லாங் கூட நமது சேலம் பிஷப் அவர்களிடம் ஒரு பாடம் கற்றுக்கொள்ளலாம். அந்த அநாகரிக நவாப் களும், பாதுஷாக்களும் ஹிந்துக்களின் கோவில்களைப் பலாத்காரமாக இடித்துத் தள்ளிக் கெட்ட பெயர் வாங்கிக்கொண்டார்கள். நம் பாதிரியாரோவென்றால், ஹிந்து கோவிலை விலைக்கு வாங்கி அதைக் கிறிஸ்துவக் கோயிலாக மாற்றி விடுகிறார்! ரூபாய் பேசுகிறது, ஸ்வாமி ரூபாய் பேசுகிறது!

மேற்படி மேட்டுப் பாளையத்தில் ஹரிஜனங்களுடைய கோவில் ஒன்று இருந்தது. அதை இந்தப் பாதிரியார் ரூபா 400 கொடுத்து விலைக்கு வாங்கினர். கோவிலுக்குள்ளிருந்த மண் அல்லது கல் சாமிக்கு டிக்கட் கொடுத்து அனுப்பினர். ஸ்வாமியை எடுத்து விட்டுச் சிலுவையை அங்கு நாட்டினர்.

இவ்வாறு நானூற்றுச் சொச்சம் ரூபாய் செலவில், அதுவரை மக்களை நரகத்துக்கு அனுப்பிக் கொண்டிருந்த இடத்தை நேரே சுவர்க்கத்துக்கு அனுப்பும் இடமாகப் பண்ணி விட்டார்.

இதெல்லாம் வேடிக்கையாகவும் தமாஷாகவும் இருக்கிறதல்லவா?

ஆனால் மேற்படி பாதிரியார் ஹிந்து கோவிலைக் கிறிஸ்துவர் கோவிலாக ஆக்கினதற்குப் பதிலாக, ஒரு முஸ்லீம் மசூதியை மட்டும் அப்படி ஆக்கியிருந்தாரானால் அப்போது தெரியும் வேடிக்கை, தமாஷ் எல்லாம்!

அம்மாதிரி அவர் செய்திருந்தால் என்னென்ன விபரீதங்கள் நடந்திருக்கும் என்று நாம் வகுத்துச் சொல்லமுடியாது ஆனால் ஒன்று நிச்சயமாய்க் கூறலாம்; பாதிரியார் இதற்குள் கட்டாயம் கப்பலேறி யிருப்பார்!

ஆனால் சாது ஹிந்துக்கள்தானே? அவர்கள் வாயைத் திறக்கமாட்டார்கள். எனவே, பாதிரியார் பண மூட்டையுடன் அடுத்தபடி வேறு எந்தக் கோவிலை விலைக்கு வாங்கி இடிக்கலாம் என்று தேடிக்கொண்டிருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

எந்த விதத்தில் பார்த்தாலும் மேற்படி பிஷப்பின் செயலை அக்கிரமம் என்றே சொல்ல வேண்டும்.

முதலாவது, ஹிந்துக்களின் கோவிலை விற்கவாவது, வாங்கவாவது யாருக்கும் பாத்தியதை கிடையாது. ஹிந்து கோயில் ஒன்று கட்டப்பட்டு விட்டால், உடனே அது ஹிந்து சமூகமான அனைத்திற்கும் உரிமையாகி விடுகிறது கோயிலைக கட்டினவனுக்கோ, அல்லது அந்த ஊர் வாசிகளுக்கோ தான் அதில் உரிமை யுண்டு என்பது கிடையாது. எனவே, மேற்படி பிஷப் கோயிலை விலைக்கு வாங்கிய செயல் முறை தவறானது.

இரண்டாவது, கிறிஸ்தவர்களாக மாறினவர்கள் அல்லது மாறப் போகிறவர்கள் ஹிந்து கோவிலை விற்றப் பணம் வாங்கிக் கொண்டதிலிருந்து நாம் என்ன அறிகிறோம்? அவர்களுடைய மதமாற்றம் பணத்தாசையினுல் தான் என்பது உண்மை கிறிஸ்துவ மதத்தில் தான் மோக்ஷம் என்று நம்பி அவர்கள் மதம்மாறி இருந்தால், அவர்களே தங்கள் கோவிலைக் கிறிஸ்துவக் கோவிலாக மாற்றியிருக்கமாட்டார்களா? அதை விலைக்கு விற்பார்களா? ஆகவே, பாதிரியார் தம்முடைய ஆண்டவன் பணியில் பணச் சாத்தானுடைய உதவியைப் பயன் படுத்தியிருக்கிறார் என்பது வெட்ட வெளிச்சம்.

மூன்றாவது, பாதிரியார் ஹிந்து கோவிலை வாங்கியதில் பிசகில்லை என்று வைத்துக் கொண்டாலும் அதையே கிறிஸ்துவர் கோவிலாக்கினது ஹிந்து சமூகத்தையே அவமதிப்பதாகும். ஆதி காலிலிருந்து கிறிஸ்துவர்களை அன்புடன் வரவேற்று ஆதரித்துத் தங்க இடமும் பிரசாரம் செய்ய வசதியும்கூட அளித்து வந்திருக்கும் ஹிந்து சமூகத்துக்கு நன்றி பாராட்டுவதற்குப் பதில் துரோகம் செய்வதாகும். கிறிஸ்தவக் கோவில் கட்ட வேண்டுமானுல் இந்த பிஷப்புக்கு வேறு இடமா இல்லை? ஹிந்துகோவிலை இடித்து விட்டுத்தானு கிறிஸ்துவக் கோவில் கட்ட வேண்டும்?

உண்மை யென்னவெனில், இத்தகைய அக்கிரமம் இந்தியாதேசம் ஒன்றிலேதான் நிகழ்தல் சாத்தியம். எது வந்தாலும் பொறுத்துக்கொள்ளும் ஹிந்துக்களின் சாதுத் தன்மைதான் அதற்குக் காரணம். சகிப்புத் தன்மையும் அசிரத்தையும் பொறுமையும் கோழைத்தனமும்—எல்லாம் ஒன்று என்று எண்ணும் நிலைமைக்கு இந் நம் புராதன சமூகம் வந்து விட்டது.

இங்கு, ஸ்ரீராமகிருஷ்ண பரம ஹம்ஸர் கூறியுள்ள ஒரு கதையை விகடன் நேயர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறன். ஒரு பெரியவர் ஒரு துஷ்டப் பாம்புக்கு உபதேசம் செய்து அதைச் சாதுப் பிராணியாக்கினர். அது வரையில் அப்பாம்பைக் கண்டு பயந்து ஓடிக் கொண்டிருந்த மாட்டுக்காரச் சிறுவர்கள் இப்போது அதன் மேல் கல்லெறிந்தும் கழியாலடித்தும் உபத்திரவப்படுத்தத் தொடங்கினர்கள்: கொஞ்சநாளைக்கெல்லாம் பெரியவர் அதே வழியாகத் திரும்பி வருகையில், பாம்பு குற்றுயிராகக் கிடந்ததைப் பார்த்தார். காரணம் கேட்டபோது, பாம்பு, "ஸ்வாமி! ஒருவரையும் கடிக்கக்கூடாது என்று ஆக்ஞாபித்தீர்களல்லவா? அதன் பலன்தான்" என்றது. "அட அசடே! கடிக்கக்கூடாது என்று சொன்னேனே தவிர, சீறக்கூடாது என்று சொல்லவில்லையே" என்ருராம் பெரியவர்.

அதுபோல், ஹிந்துக்கள் மனதிற்குள் பூர்ண சகிப்புத்தன்மை கொண்டிருக்கட்டும்; சர்வமத சமரச ஞானம் உடையவர்களாயிருக்கட்டும்: ஆனால் தங்கள் மதத்தைப் பிறர் அக்கிரமமாக அவமதிக்கும்போது கொஞ்சம் சீறுவதற்கும் அவர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும் என்பது விகடனுடைய விருப்பம்.

இந்தமாதிரி அக்கிரமங்களுக்கும், அவமதிப்புகளுக்கும், மூலகாரணம் என்னவென்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

ஹிந்து சமூகத்திலுள்ள பாழுந் தீண்டாமை வழக்கமும் சாதி உணர்ச்சியும், "என் சாதி உயர்ந்தது" "உன்சாதி தாழ்ந்தது" என்ற முட்டாள் எண்ணங்களுந்தான்.

இந்தத் தேசத்தில் வருங்காலத்தில் நமது சந்ததிகள் சுயமரியாதையுடன் வாழ வேண்டுமென்னும் எண்ணம் உள்ள ஒவ்வொரு ஹிந்துவும (1) தீண்டாமைப் பேயைத் தொலைப்பதற்கும், (2) பிற மதஸ்தர்கள் ஹிந்து மதத்தைத் தழுவ விரும்பினுல் அவர்களை இரண்டு கையாலும் வரவேற்பதற்கும் சித்தமா யிருக்கவேண்டும். இல்லாவிடில் இந்தப் புராதன ஹிந்துசமூகம் 'நாளுக்குநாள்தேய்ந்ததுகாண் அம்மானே!" என்று சர்வநாசத்தை நோக்கி நகரவேண்டியதுதான்.

## சங்கானையில் சின்னமேளச் சண்டை,

——(*)——

### தாஸியரை உபசரிப்பது யார்?

### ஒருவர்க்குக் கத்திவெட்டு.

(நமது நிருபர்)

சங்கானையைச் சேர்ந்த அராலி வைரவர் கோவிலில் சென்ற வாரம் சின்னமேளக் கச்சேரி சம்பந்தமாக ஓர் கட்சிபிரிந்த கலகம் தோன்றியது என்றும் அதனுல் இப்போது யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்தில் வழக்குத் தொடரப் பட்டிருக்கிறது என்றும் அறிகிறோம்

சின்னமேளக் கூட்டத்தைச் சேர்ந்த சில தாஸியர் ஷெ கோவிலுக்கு நாட்டியமாடச் சென்றபோது அவர்களை உபசரிப்பதில் யார் முதன்மை பெறுவது என்பதிலிருந்தே இக்கலகம் தோன்றியதென்று சொல்லப்படுகிறது. இக்கலகத்திற் செல்வம் என்னும் ஒருவர் சுப்பிரமணியமென்னும் ஒருவரைக் கத்தியாற் குற்றினர் என்றும், செகராஜா, சின்னத்துரை, சுப்பிரமணியம் என்பவர்கள் ஒரு கட்சியாகவும், செல்லம், பொன்னுத்துரை, செல்வத்துரை என்பவர்கள் ஒருகட்சியாகவுஞ் சேர்ந்து கலகம் விளைத்தனர் என்று சங்கானைப் பொலிஸ் விதானையினுல் குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றனர்.

எதிரிகள் 100 ரூபா பிணையில் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர் என்று தெரிகிறது

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: யுவஹ
ஆனிமீ ௩௧௨ திங்கட்கிழமை.


## உபாத்தியாயர்கட்கு நேர்முக வேதனம்.

இதுகாறும் இலங்கையிலேயுள்ள உதவிப்பணம் பெறும் வித்தியாசாலைகட்கு, குறித்த உதவிப்பணத்தை அரசினர் வருடத்திற்கொருமுறை வித்தியாசாலை அதிபரிடம் அனுப்ப அவர் அதனைப் பன்னிரண்டாகப் பிரித்து மாசந்தோறும் உபாத்தியாயர்கட்குக் கொடுத்துவந்தனர். இந்த உதவிப் பணம் வருவது வருடாந்தப் பரீட்சை முடிந்து சிலமாசங்கள் சென்றபின்பாதலாலும், சில சமயங்களில் வித்தியாசாலையதிபர் உபாத்தியாயர்கட்கு வேதனங் கொடுப்பதற்கு முற்பணம் வேண்டி நேர்தலாலும், மாசந்தோறும் உபாத்தியாயர்கள் கிரமமாக வேதனம் பெறுதல்சஷ்டமாயிற்று. இதனால், ஆசிரியர்கள் பலர், அக்குறையை உபாத்தியாயர் சங்கங்கட்கு முறையிட, அவர்கள் அரசினர்க்கு முறைப்பட, அதன்பயனாகவே உபாத்தியாயர்கட்கு இனிமேல் நேர்முகவேதனங் கொடுக்கவேண்டுமென்ற ஏற்பாடு பிறக்கலாயிற்று. இலங்கையிலே பல வித்தியாசாலைகளிற் கல்வி பயிற்றும் உபாத்தியாயர்கள் அநேகர் கிரமமாக மாசந்தோறும் வேதனத்தைப் பெற்றுக்கொள்ளாமல், வருடம் ஒருமுறை பெறுதலினால், நித்தியதரித்திரராய்ப் பெரும் நஷ்டப்படுகின்றனரென்பது உண்மையாகும்.

நேர்முகமாக வேதனம் உபாத்தியாயர்கட்கு மாசந்தோறும் உதவப்படுமென்பதை உணர்ந்த வித்தியாசாலை அதிபர்களாயுள்ளாரிற் பலர், அப்படி நேர்முகமாகக் கொடுக்கப்படின் தங்கட்கு உபாத்திமாரிற் "பிடி" இல்லையென்றகாரணத்தினற்போலும், அந்தமுறை வேண்டாமென்றும், வருடத்திற்கொருமுறை அதிகாரிகள் தரும் உதவி நன்கொடைப் பணத்தை மூன்று மாசத்திற்கொருமுறை தந்தால், தாங்கள் உபாத்தியாயர் வேதனத்தை அவர்கட்கு மாசந்தோறும் கிரமமாகக் கொடுத்தல் முடியுமென்று அதிகாரிகட்கு மனுப்பண்ணினர். ஆனால் அதிகாரிகள் தங்களிடம் அப்படித் தருவதற்குப் பணமில்லையென்று சொல்லி மறுத்துவிட்டனர். வித்தியா நிர்வாகசங்கத்தாரும் இதற்கு உடன்படாதொழிந்தனர்.' ஆனால் சபைகளாகவும் சங்கங்களாகவும் சேர்ந்து வித்தியாசாலைகளை நடாத்துவோர் உபாத்தியாயர்கட்கு நேர்முகமாக வேதனங் கொடுக்கும் விஷயத்திற் பிரதிகூலமாகவே நிற்கின்றனரென்பது இப்பொழுது விளங்கக்கிடக்கின்றது. அல்லாமலும் சங்கம் சபைகளாற் பரிபாலிக்கப்படும் வித்தியாசாலைகளிற் கல்விபயிற்றும் உபாத்தியாயர்களுட் பலர் நேர்முகமாக மாசவேதனம் பெறுதற்கு விருப்பமில்லாதவர்களாகக் காணப்படுகின்றனர். இந்தப் பிணக்கைத் தீர்ப்பதற்கான உபாயத்தைச் சூழ்ந்து கரும் ஆற்றதலான பொறுப்பு வித்தியாபகுதி மந்திரியிற் சுமத்தப்பட்டது. ஆயினும் வித்தியாபகுதிமந்திரி ஆராய்ந்து கொண்ட உபாயத்தை அவருடைய வித்தியா நிர்வாகசபையார் ஏற்றுக்கொள்ளப் பின்னிற்கின்றனர். வித்தியாசாலைகளை வைத்து நடாத்தும் சபையினர் சங்கத்தினரும் இந்தக் கஷ்டங்களிலிருந்து தப்பவேண்டுமானால் நேர்முகவேதனத்தை ஆசிரியர்கட்குக் கொடுக்கும் முறைக்கு உடன்படவேண்டியே இப்பொழுது நேர்ந்திருக்கின்றது.

இக்காலத்தில் உபாத்தியாயர்கள் படுங் கஷ்டங்களை இங்கே எடுத்துக் காட்டுதல் மிகையாகாதெனலாம். "எழுத்தறிவித்தவன் இறைவன்" என்றும் ஐங்குரவருள் ஆசிரியரும் ஒருவரென்றும் மதிக்கப்பட்டு வந்த உபாத்தியாயர்கள் இப்பொழுது அவைக்கு நேர்விரோதமான நிலைமையில் இருக்கின்றார்கள்; உத்தமமான தொழில் என்று பாராட்டப்பெற்றுவந்த கல்விபயிற்றுந் தொழில் இப்பொழுது ஆற்குமையினற் செய்யப்படும் தொழில்போல் அவமதிக்கப்படுகின்றது. இப்பொழுதுள்ள உபாத்தியாயர்கள் வித்தியாசாலை யதிபருக்குப் பயப்படல் வேண்டும்; வித்தியாதரிசிகளுக்கு அஞ்சி நடத்தல் வேண்டும்; வித்தியாகர்த்தரின் நிபந்தனைகட்கு அடங்கி நடத்தல்வேண்டும். மாணுக்கரின் பெற்றோரைப்பேணி யொழுகுதல்வேண்டும். சிற்சிலசமையங்களில் தாம் பயிற்றும் பிள்ளைகட்கும் ஒதுங்கித்தான் நடத்தல்வேண்டும். கீழ் உபாத்தியாயர்கள் தலைமை யாசிரியருடைய மனக்குறிப்பை அறிந்து அதற்கியைய நடத்தல்வேண்டும். எந்த நேரத்தில் தம்மை விடுவரோ என்று இவ்வுபாத்திமார் வண்ணான் துறையில் வசிக்கும் முயலைப்போல எந்நேரமும் ஏங்கிக்கொண்டிருத்தல் வேண்டும். இவை மாத்திரமா? இல்லை! இன்னுமொன்றுளது; தாம் ஒரு பள்ளிக்கூடத்தில் ஸ்திரமாக இருக்கவேண்டுமானால் அந்த உபாத்தியாயர் ஊரிற்சென்று பிள்ளைகளைச் சேர்த்துக் கொண்டுவந்து பள்ளிக்கூடத்திற் படிக்கவிடுதல்வேண்டும். இப்படியான அந்தர நிலையிலுள்ள ஆசிரியர்கட்குச்சுவதந்திரம் கனவிலுமுண்டா?

எவனாவது இரண்டு மூன்று எஜமானருக்குக்கீழ் எக்கருமத்தையேனும் சரிவரப் பார்த்தல்முடியாது. நாட்டின் ஈடேற்றத்தை விரும்புவோரெவரும் உபாத்தியாயர்கள் சுவாதீனமாயிருத்தல் வேண்டுமென்ற விஷயத்தில் வற்புறுத்தி நிற்றல்வேண்டும். இப்பொழுது உபாத்தியாயர்கள் சம்பந்தமாக அரசினர் கொண்டுள்ள நோக்கத்தை உற்றுநோக்குமிடத்து, காலகதியில் இவர்கள் அரசாங்க உத்தியோகத்தர்களைப்போற பலவகையான கட்டுப்பாடுகளுக்குள்ளும் நிபந்தனைகளுக்குள்ளும் அகப்பட்டுச் சுவாதீனமென்பது எள்ளளவுமில்லாராய் வாளா விருத்தல் வேண்டி நேரிடுமென்பது நிசம். அவர்கள் கல்விபயிற்றும் வித்தியாசாலைகட்கும் அரசினர் வித்தியாசாலைகட்கும் எவ்வகையான பேதமும் இல்லையாகும். அங்ஙனமானால், தத்தம் சமய ஆசாரம் சாதிபாசாரங்களின் முறைப்படி இலங்கையிலுள்ள ஒவ்வொரு மதவாதிகளாலும் ஆரம்பித்து நடாத்தப்பெறுவரும் வித்தியாசாலைகள் வாயிலாக அடையக்கூடிய விசேஷ பயன் யாதுமில்லை யெனலாம். இப்படியெல்லாம் பெரும் மாறுபாடுகள் ஏற்படுமாதலால், அரசினர் மூன்று மாசத்திற்கொருமுறை நன்கொடைப்பணம் உதவுதற்கான ஏற்பாட்டைச் செய்தல் நன்மையாகும்.

---

### இத்தலிய — அபிசீனியத் தகராறு.

1928-ம் ஆண்டில் அபிசீனியா சம்பந்தமாக அக்காட்டிற்கும் இற்றலிக்குமிடையே ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி அபிசீனியா எல்லைப்புறம் சம்பந்தமாக இரு நாடுகளுக்கும் இடையே எழும் பிணக்குகள் ஓர் மத்தியஸ்தச் சபையால் தீர்த்துவைக்கப்படல் வேண்டும். இப்போது எழுந்துள்ள பிணக்கைத் தீர்த்து வைப்பதற்காக ஓர் மத்தியஸ்தச்சபை ஏற்படுத்தப்பட்டது. இச்சபையின் விசாரணையில் இற்றலி ஆரம்பத்திலேயே வெறுப்புக்கொண்டு 1928-ம் ஆண்டு உடன்படிக்கையைமீறி யுத்தவீரரை நாடோறும் அபிசீனியாவுக்கு அனுப்பிக்கொண்டே வருகிறது. இது மாத்திரமா? "கறுப்பர்களை வெல்வோம்: இந்த மிலேச்ச சாதியாரை நாங்கள் மிஞ்சவொட்டாது தடுத்தல் வேண்டும்" என்று இத்தலிய சர்வாதிகாரி முசோலினியும், யுத்தவெறி பிடித்த அவரது சகாக்களும் தினம்தினம் உறுமிக்கொண்டே வருகின்றனர். சுருக்கச் சொல்லுங்கால் இற்றலி நாடுபிடிக்கும் ஆசை கொண்டுவிட்டது. அபிசீனியாவை நசிக்கக் கங்கணங் கட்டி விட்டது. அபிசீனியாவில் ஏற்பட்டுள்ள ஆபத்தான நிலையைக்கண்டு அமெரிக்க அரசினரும் பிரான்சிய அரசினரும் தத்தம் பிரசைகளை அபிசீனியாவிற் பாதுகாக்க ஏற்பாடு செய்து வருகின்றனர்.

இது விஷயத்தில் ஐரோப்பிய வல்லரசுகளின் நிலை என்ன? ஒன்றாவது முதுகெலும்புள்ளதாய்க் காணப் படவில்லை. யாவும் இற்றலிக்கு அஞ்சி இருக்கின்றன. அபிசீனியாவுக்கு யுத்த தளபாடங்கள் ஏற்றுமதி செய்வதைத்தானும் சில வல்லரசுகள் தடுத்து விட்டன. அந்தோ! இந்த கோரத்திலாவது யுத்த தளவாடங்களை விலைக்குத் தாருங்கள் என்று அபிசீனியா ஓலமிடுவது இம் மதிகெட்ட முதுகெலும்பற்ற வல்லரசுகளின் செவிகளில் நுழையவில்லை.

தனது ஆபத்தான நிலையை உணர்ந்த அபிசீனியா சர்வதேச சங்கத்தின் உயர்தர மன்றத்திற்கு இப்போது மனுச்செய்திருக்கிறது. ஆனால் இச்சங்கமாவது அபிசீனிய—இத்தலியப் பிணக்கைத் தீர்த்துவைக்குமா? இற்றலியே இது விஷயத்திற் பிழை செய்திருக்கிறது என்பதை இச் சங்கம் உணர்ந்தால், அபிசீனியாவுடன் சேர்ந்து இற்றலிக்கு மாறாக யுத்தம் செய்யும்படி தனது அங்கத்தவர்களான வல்லரசுகளுக்குக் கட்டளை இடுமா? அக்கட்டளையை வல்லரசுகள் ஏற்குமா? அபிசீனியா சர்வதேச சங்கத்தின் உயர்தரச் சங்கத்திற்கு ஒரு மனுச் செய்ததையை அறிந்துள்ள இற்றலி இப்போதே ஆக்கிரமிக்கத் தொடங்கியிருக்கிறது. அபிசீனியாவின் மனுவை அச் சங்கம் ஏற்குமானால் தான் உடனே சங்கத்தை விட்டு விலகிவிடுவேன் என்று இற்றலி இப்போதே முழுமுரசு தொடங்கி விட்டது. இற்றலிக்கு அஞ்சியுள்ளது சர்வதேசசங்கம். எனவே அதிலிருந்து ஏதும் உதவி பெறலாமென்று அபிசீனியா காத்திருப்பது வீண்.

அபிசீனியாவின் கதிமோட்சம் அதன் படமே தங்கியுள்ளது. இற்றலியின் படைவீரர் திறமையானவராயிருக்கலாம். தற்காலத்து நவீன முறைப்படி போர் புரிபவராயிருக்கலாம். ஆனால் அபிசீனியருக்கு இயற்கையன்னையின் அநேக பாதுகாப்புக்கள் உள்ளன. ஒரு கோடியே 20 லட்சம் வீரரைப் போர்முனையில் நிறுத்த அபிசீனியா தயார். இதனை முசோலினி அறியாமல் இல்லை, அபிசீனியாவின் பலத்தை உத்தேசித்துத் தான் இற்றலி இன்னும் போர் தொடுக்கவில்லை. முசோலினிக்கு உட்பயமுண்டு. இந்தப் பயம் ஒன்றே இற்றலிய — அபிசீனியச் சமாசத்தை உண்டுபண்ணினாலும் உண்டுபண்ணும்.

---

## கண்ணேட்டம்.

### கிராமச் சங்கங்கள்.

இற்றைக்குச் சில ஆண்டுகட்கு முன்னர் இலங்கையில் உள்ள கிராமச் சங்கங்களில் அவ்வவ்வூர்த் தலைமைக்காரரே தலைவராக நியமனஞ் செய்யப்பட்டு வந்தனர். அப்போது நம் தேசாபிமானிகளும் தலைவர்களும் இட்ட ஓலத்திற்கும் ஓர் எல்லையுண்டா? தல சுயாட்சித் தாபனங்களான கிராமச் சங்கங்களில் தலைவர்கள் அரசினரால் தெரிவுசெய்யப்படவொண்ணாது அதிகார வர்க்கத்தினர் இடம் பெறவொண்ணாது. கிராமத்து மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒருவரே தலைவராகத் தெரிவு செய்யப்படல் வேண்டும். அப்போது தான் கிராமச் சங்கங்கள் தங்கள் எல்லைக்குட்பட்ட இடங்களில் திறமையுடன் வேலைசெய்ய முடியும். பொதுஜன வாழ்க்கையைத் திருத்தியமைக்க முடியும் என்று இவர்கள் கதறினர். அவர்கள் கதறலை அரசினர் கேட்டு அவர்களின் எண்ணப்படியே விட்டனர். இப்போது கிராமச் சங்கங்களில் ஊரவர்களால் தெரிவு செய்யப் பட்டவர்களே தலைவர்களாய் இருக்கின்றனர்.

---

### ஆனால் இப்போது?

ஆனால் ஊரவர்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவர்களைக் கொண்ட கிராமச் சங்கங்கள் இப்போது திறமையுடன் வேலை செய்கின்றனவா? கிராமச்சங்க வருமானத்தில் 100 க்கு 40 விகிதம் அவற்றின் பரிபாலனச் செலவிலேயே போகிறதென்று வடமாகாணத் தலைவராயிருந்த மிஸ்ரர் எட்மண்ட் ஞெட்நிக்கோ அவர்கள் 1934-ம் ஆண்டுக்குரிய தமது பரிபாலன அறிக்கையில் வடமாகாணத்தில் உள்ள கிராமச் சங்கங்கள் விஷயமாகக் குறிப்பிடுவதிலிருந்து எம் கிராமச் சங்கங்கள் எவ்வளவு ஊதாரித் தனமாக நடக்கின்றன என்பதும், அவை ஊரவர்களின் நன்மைக்கான கைங்கரியங்களில் போதிய கவலை செலுத்தவில்லை என்பதும் புலப்படுகின்றது. இக் கிராமச் சங்கங்களின் ஊதாரித்தனத்தைக் காட்டுவான்வேண்டி மாகாணத் தலைவர் பின்வரும் உதாரணங்களைக் குறிப்பிடுகின்றார். கரைச்சிக் கிராமச் சங்கத்தின் வருட வருமானம் 657 ரூபா. ஆனால் அதன் லிகிதரின் வேதனம் 300 ரூபா. இதனைப் பின் 360 ரூபாவாக உயர்த்தியிருக்கின்றது ஆனால் இந்த லிகிதர் செய்யும் வேலையென்ன? ஒருவாரத்தில் 2 மணித்தியாலத்திற்குமேல் வேலை செய்வதில்லையாம். நல்லூர்க் கிராமச்சங்கத்தின் வருட வருமானம் 560 ரூபா. ஆனால் அதன் லிகிதரின் சம்பளம் 240 ரூபா. இந்த லிகிதர் மேற்படி கிராமச்சங்கத்திற்கு மாத்திரம் கடமை செய்பவரல்லர். மணியகாரரின் கிளார்க்குமவராம்! இன்னோர் கிராமச்சங்கத்திற்கும் அவர்தானும் கிளார்க்! இப்படித் தனக்கு மிகச் சொற்ப வேலை செய்யும் ஒருவருக்கு இப்பஞ்சகாலத்தில் மாதம் 20 ரூபா கொடுக்கும் கிராமச் சங்கத்தின் செயலை ஔதாரியம் என்போமா? ஊதாரித்தனம் என்போமா? மௌட்டீகம் என்போமா?

---

### காரைநகர் வேடிக்கை.

காரைநகரிலுள்ளவர்கள் ஓர் ஒழுங்கை வேண்டுமென்று கிளர்ச்சி செய்தனர். ஆனால் கிராமச்சங்கம் அது விஷயத்திற் சற்றுப் பின்னடைந்தது உடனே ஒருவர் கிளம்பி மேற்படி ஒழுங்கையைத் திறப்பதற்கு வேண்டிய காணிகளை வாங்கக் கிராமச் சங்கத்திடம் பணம் அப்போது இல்லாவிட்டால் தானே அத்தொகையைக் கடனாகக் கொடுப்பதாகவும் பின்னர் அதனைக் கிராமச்சங்கம் இறுக்க முடியாவிட்டால் அத்தொகையை நன்கொடை புரிவதாயும் மேற்படியார் கூறினர். உடனே கிராமச்சங்கம் இவ்வளவு தொகை செலவழிக்க வேண்டுமென்று தீர்மானித்தது. இதற்கிடையில் நீதிஸ்தலத்தில் இது விஷயம் வந்தது. இது தீர்க்கப்படுமுன்னர், கிராமச் சங்கத்தின் காலவெல்லை முடியப் புதிய ஓர் சங்கம் தெரிவு செய்யப்பட்டது இச்சங்கத்திற்குமேற்படி ஔதாரியப்பிரபுவே தெரிவு செய்யப்பட்டார். இதற்கிடையில் மாகாணத் தலைவர் கிராமச்சங்கப் பொக்கிஷாதிகாரி என்ற நியதியில் ஒழுங்கை திறப்பதற்கான காணிகளை வாங்கி இது விஷயமாய் மீண்டும் கிராமச் சங்கத்தின் உத்தரவைப் பெறும்படி புதியதலைவரைக் கேட்டார். பழைய ஔதாரியப் பிரபுவான புதிய தலைவர் கொடுத்த மறுமொழி என்ன தெரியுமா?

---

### சபாஷ்!

"முந்திய தலைவர் சபகலங் கருதியே ஒழுங்கை திறக்க வேண்டும் என்றார். சுய நலத்தினாலேயே இந்த மௌட்டீக காரியத்திற்குக் கிராமச்சங்கத்தின் உத்தரவைப் பெற்றார். நான் இனிப் பெற மாட்டேன்" என்றார் அவர். மாகாணத் தலைவர் கெஞ்சினர், மன்றாடினர்! வாய்க்கவில்லை கிராமச்சங்கப் பொக்கிஷாதிகாரி என்னும் நியதியில் அவர் உடனே கிராமச் சங்கத்தின் உத்தரவின்றியே பணத்தை எடுத்து, ஒழுங்கை திறப்பிக்கும் வேலையை முடிப்பித்தார்! இக் கிராமச்சங்கத் தலைவரை என்னென்று கூறுவேம்! பச்சோந்தி என்போமா? இப்படியான தலைவர்களாலேயே சுயாட்சியத்திற்குமூலாதாரமான கிராமச்சங்கங்கள் போன்ற ஸ்தல சுயாட்சி நிலையங்கள் வீழ்ச்சியடைகின்றன.

---

### விவாகப்பதிவு.

கந்தையா—மகேஸ்வரியம்மாள்.

சென்ற 12-7-35 வெள்ளிக்கிழமை இரவு, கொழும்பு கணக்குப் பரிசோதகப்பகுதியில் உத்தியோகத்தாயுள்ள ஸ்ரீ வை. கந்தையா அவர்களுக்கும், இலங்கை யாசினரின்கீழ் புகாதஸ்தானத்துத் தலைவராயிருந்த ஸ்ரீ K. சபாரத்தின மவர்களின் புத்திரி மகேஸ்வரி அம்மாளுக்கும் இடையே விவாகப் பதிவு பலர் சமுகத்தில் நிகழ்ந்தது.

# கறுப்பர்களைக் கொல்லக் கங்கணம் கட்டும் இற்றலி.

## "உரோமரின் பலத்தை இன்றே காட்டுவோம்."

அமெரிக்கரின் அமைதி. ஜெர்மனியின் நிலை என்ன?
பிரான்ஸின் பீதி. இற்றலிக்காதரவு?

## அபிஸீனியாவுக்கு ஆயுதமுங் அனுப்பாராம்.

(அரசியல் வாதி)

அபிசினியாவில் யுத்தமேகம் குவிந்துவிட்டது. இத்தலிய அரசினரோ சமரச மனப்பான்மையுடையவராகத் தெரியவில்லை. கறுப்பர்களை முறியடிக்கவேண்டும் என்ற பிரசாரம் இற்றலி எங்கும் செய்யப்படுகின்றது. யுத்தக்கவிஞரான அனன்ஸியோ என்னும் இற்றலியர் இதுவிஷயமாக நிகழ்த்தியுள்ள பிரசாரணம் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாம். "ஹே! இற்றலிய வீரர்களே! நீவிர் கறுப்பர்களின் நாடாகிய அபிஸீனியாவிற்குச் செல்கின்றீர்கள். வெற்றி உங்களினதே என்பது நிச்சயம். மிலேச்சர்களையும் அவர்களது நண்பர்களையும் வெல்லாதுவிட்டால் உரோமர் என்று நாம் இருந்ததில் என்ன பயன்?" என்பதே அக்கவிஞரின் பிரசாரம்:

ஃ ஃ ஃ

இத்தலியப் போர்வீரர் தினந்தோறும் ஆயிரக் கணக்கில் ஆபிரிக்காவிற்குச் செல்கின்றனர். எஃகுத் தொழிற்சாலைகளில் இரவுபகல் என்றபேதமின்றி யுத்த தளபாடங்கள் செய்யப்படுகின்றன இற்றலியில் 50 புதிய ஆயுத உற்பத்தித் தொழிற்சாலைகள் முளைத்தெழுந்துவிட்டன.

ஃ ஃ ஃ

இற்றலியின் அக்கிரமம் ஒருபக்கமிருப்ப, ஐரோப்பியவல்லரசுகளின் பட்சபாதகமான செயல் அபிஸீனியாவைப் பெரிதும் வாட்டுகின்றது. ஆட்பலத்திற்கு அந்நாட்டிற் குறைவில்லை. ஆனால் ஆயுதப்பலம் இல்லை. வல்லரசுகள் தத்தம் தேசங்களில் இருந்து அபிஸீனியாவிற்கு யுத்த தளபாடங்கள் அனுப்பவொண்ணாது என்று கண்டிப்பான உத்தரவு தனித்தனி பிறப்பித்திருக்கின்றன. இதுசம்பந்தமாக அபிஸீனியா, இங்கிலாந்து, பிரான்ஸ், பெல்ஜியம் என்னும் நாடுகளுக்குத் தனித்தனி கடிதம் அனுப்பியிருக்கிறது இந்தச்சந்தர்ப்பத்தில் எமக்கு ஆயுதங்கள் அனுப்புவதைத் தடுப்பது நீதியாகாது. இது அழகல்ல" என்று அக்கடிதங்களிற் குறிப்பிட்டிருக்கிறது.

ஃ ஃ ஃ

இத்தலி மத்தியஸ்தச் சபையின் விசாரணைக் கிணங்க மறுத்துவிட்டது. எனவே இதுவிஷயமாகச் சர்வதேசசங்கத்து உயர்தரச்சங்கமே ஓர் முடிவுக்கு வரவேண்டும் என்று அவசரமாக அபிஸீனியா சர்வதேச சங்கத்திற்குச் செய்தி அனுப்பியிருக்கிறது. ஆனால் இதுவிஷயத்திற் சர்வதேச சங்கம் முன்வருமானால், இற்றலி அச்சங்கத்தைவிட்டு வெளியேறும் என்று இற்றலி ஆக்கிரமிக்கிறது. சர்வதேசசங்கம் இருதலைக்கொள்ளி எறும்பென விழிக்கின்றது. கடவுள் நீதிப்படி அபிஸீனியாவிற்கு உதவி செய்ய வேண்டும். ஆனால் இற்றலி பகைத்துக் கொண்டால் ? இற்றலியும் சர்வதேச சங்கத்தைவிட்டு நீங்கிவிட்டால் அச்சங்கம் அதோகதியடையும் என்பது நிச்சயம்.

ஃ ஃ ஃ

பிரான்ஸ் இங்கிலாந்துடன் இப்போது கோபங்கொண்டிருக்கிறது. தன்னுடன் உசாவாமல் இங்கிலாந்து மிஸ்ரர் ஈடனை இற்றலிக்கு அனுப்பிச் சமரசம் பேச முனைந்தது ஏன் என்பது பிரான்ஸின் வியாயம். அமெரிக்கா ஆரோ செத்தால் எவனோ அழுவான் என்னும் நிலைமையில் நிற்கின்றது. ஜப்பான் இற்றலியைக் குறைகூற நியாயம் இல்லை. ஏன், அது சிறு விஷயத்திலும் இப்படித்தானேகர்மம் ஆற்றிவந்திருக்கிறது? ஜெர்மனி இற்றலியுடன் அநுதாபப்படுகின்றது. நாடு பிடிக்கும் ஆசை பழையபடி ஜெர்மனியிடம் தோன்றியிருக்கிறது. இற்றலி ஆபிரிக்காவின் நாடுகளைப் பிடித்தால், தானும் பிடிக்கலாம் என்பது ஜெர்மனியின் எண்ணம் போலும்! ருஷியா, இற்றலியின் செயலில் வெறுப்புக்கொண்டிருக்கிறது. ஆனால் அந்நாடு இங்கிலாந்தை இதுவிஷயத்திற் பின்பற்றும்.

ஃ ஃ ஃ

ஆனால் இங்கிலாந்தின் நிலைமை என்ன? சென்ற வெள்ளிக்கிழமையன்று நிகழ்ந்த பாராளுமன்றத்தில் அந்நிய நாட்டு மந்திரியான சேர் சாமுயல் ஹோர் பிரிட்டிஷாரின் நிலைமையை எடுத்து விளக்கினர். சமாதானத்தையே கடைசிவரைக்கும் நிலைநாட்டத் தாம் பாடுபடுவதாயும், அபிஸீனியாவின் சுதந்திரத்தைக் காப்பாற்றவேண்டிய தாவசியகம் என்றும் சேர் சாமுயல் ஹோர் குறிப்பிட்டார்.

ஃ ஃ ஃ

கிறீஸ் தேசத்தில் முடியாட்சி பழையபடி நிலவும் என்று நம்பப்படுகின்றது. சென்ற 10-7-35இல் கிரேக்க பாராளுமன்றத்தில் ஓர் தீர்மானம் நிறைவேறியது. அதாவது நவம்பர் மாதத்தில் முடியாட்சி நிலவவேண்டுமா என்பதுபற்றிப் பொதுஜன வாக்குச் சம்மதம் எடுக்கப்படல் வேண்டும் என்பதே. இத்தீர்மானம் நிறைவேறியதும் பாராளுமன்றத்தவர்கள் கிரேக்க மன்னர் வாழ்க! வாழ்க! என்று கோஷம் செய்தனராம்.

ஃ ஃ ஃ

ஜப்பான் ஓர் பாரிய கடற்படையைக் கட்டத் தீர்மானித்திருக்கிறது. இப்போது செலவழிக்கப்படுகிறதிலும் பார்க்க ஒரு கோடிபவுண்கள் அதிகமாக இதுவிஷயத்திற் செலவழிக்க அந்நாடு தீர்மானித்துவிட்டது.

ஃ ஃ ஃ

1936ம் ஆண்டில் அமெரிக்கா 12 பெரிய யுத்தக் கப்பல்களையும் 6 நீர் மூழ்கிகளையும் ஓர் பாரிய கப்பலையும் கட்டத் தீர்மானித்திருக்கிறது. இப்படியே ஒவ்வோர் வல்லரசும் தனித்தனி அழிவுக்கேதுவான யுத்த தளவாடங்களைப் பெருக்கிக் கொண்டே போனால் முடிவு எப்போது?

### இந்தியர் கலக்கம்.

சாம்ராஜ்ய இந்திய பிரஜா உரிமைச் சங்க நிர்வாக சபையினர், கீழ்க்கண்ட தந்தியை சர்க்காருக்கு அனுப்பியுள்ளார்கள்:

இத்தாலி அபிஸீனியாவைத் தாக்குமெனத் தோற்றுவதால் அபிஸீனியாவிலுள்ள ஈராயிரத்திற்கு மேற்பட்ட இந்தியரின் நிலைமையைப்பற்றி இச்சபையினர் கவலையடைந்திருக்கின்றனர். தங்கள் தேசத்தாரைப் பாதுகாக்க, அமெரிக்க பிரெஞ்சு சர்க்கார்கள் நடவடிக்கையெடுத்துக் கொண்டிருப்பதாக அபிஸீனியாவிலிருந்து வந்த கடிதமொன்று கூறுகிறது. அங்குள்ள இந்தியரின் உயிர்களையும் சொத்தையும் பாதுகாக்க அரசினர் நடவடிக்கையெடுத்துக் கொள்ளுவார்களென்று நம்புகிறோம்.

அபிஸீனியாவிலிருந்து பிரிட்டிஷ் பிரஜைகளை வெளியேற்ற அரசினர் இதுவரை யாதொரு விசேஷ ஏற்பாடுகளும் செய்யவில்லையென்று தெரிகிறது. இம்முறை கையாளவேண்டிய அவ்வளவு நெருக்கடி ஏற்படவில்லையென்று அரசினர் கருதுகின்றனர்.

### மிகப்பெரிய யுத்தக் கப்பல்

10 ஆயிரம் டன் கனமுள்ளதும் 5000 அடி நீளம், 610 அடி அகலமுள்ளதும் மணிக்கு 35 மைல் வேகத்தில் போகக்கூடியதுமான "குவின்மெரி" என்னும் பெரியதொரு யுத்தக்கப்பல் நியூயார்க்கில் கட்டப்பட்டுவருகிறது 1933-ம் வருஷத்தில் இக் கப்பல் கட்ட ஆரம்பிக்கப்பட்டது. 16 லட்சம் பவுண் இதுவரை செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதில் 8 அங்குல பீரங்கிகள் எட்டும் இருக்கின்றன. 1936-ல் கட்டி முடியுமென்று தெரிகிறது.

# காதலிக்குப் பொறிவைத்த வாலிபன்.

## தேங்காய்ச்சிரட்டைக்குள் கடிதம்! தந்தைக்குக்காட்டிய மங்கை!

## வஞ்சம்தீர்த்த சிங்களவாலிபனுக்கு 15 வருஷக் கடூழியச்சிறை.

சதிரிஸ் சிங்கோ என்னும் சிங்களக் கிராமவாசி தன் காதலியாகிய கஞ்சில்ஹாமி என்னும் மங்கையைக் கொலைசெய்ய எத்தனித்தான் என்ற குற்றச்சாட்டின் பேரில் கொழும்புச் சுப்பிறீம்கோட்டில் 15 வருஷக் கடுங்காவற் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டான்.

குறித்த பெண்ணின்வயது 21. ரப்பர் பால் சேர்க்கும் வேலையில் இரத்தினபுரியில் ஓர் தோட்டத்தில் இருந்தாள். எதிரியாகிய சிங்களவாலிபன், அத்தோட்டத்தில் இருந்து $1\frac{1}{2}$ மைல் தூரத்திற்கப்பால் வசிப்பவன். ஒருநாள் அவன் அவளைச் சந்தித்துக் காதல் கொண்டான். அதன்பின் அவன் ஒழுங்காகக் காதற்கடிதங்கள் எழுதிக்கொண்டு தோட்டத்திற்கு வந்து ஆங்குள்ள தேங்காய்ச் சிரட்டைகளுக்குள் அவற்றை மறைத்துவிட்டுப் போவதும், அப்பெண் அக்கடிதங்களை எடுத்துத் தன் தந்தையிடம் கொடுப்பதும் வழக்கமாம்.

இக்கடிதங்களில் வாலிபன் தன் நிலையை எடுத்து விளக்கினான். "உன்னையன்றி நான் மற்றவர்களைக் கனவிலும் எண்ணேன். உன்னையே நான் விவாகம் செய்வேன்: அன்றேல் உயிர் விடுவேன்" என்று அடிக்கடி எழுதிவந்தான். ஆனால் மங்கையோ மனம் இளகவில்லை அவளது நிலையைக்கண்ட சதிரிஸ் சிங்கோ சொல்லொணு ஆத்திரம் கொண்டான். எவ்வாறேனும் தான் வஞ்சம் தீர்க்கவேண்டுமென எண்ணித் தீர்மானித்தான். எனவே சென்ற ஆண்டு ஆகஸ்டுமாதம் 10ம் தேதி இப்பெண் ரப்பர்பால் சேர்க்கும் இடத்திற் கருகேயுள்ள செடிக்குச் சமீபமாகப் பொறித் துப்பாக்கி வைத்துவிட்டுச் சென்றுவிட்டான். அடுத்தநாள் அவள் ரப்பர்ப் பால் சேர்க்கும்போது, வாலிபன் நாத்திருந்தபடி துப்பாக்கி வெடித்து, மங்கைக்கு அபாயகரமான காயங்கள் விளைத்தது அவற்றின் பயனாக அவள் ஆஸ்பத்திரியில் 92 நாட்கள் சிகிச்சை பெற்றாள்."

### மனிதனைக் கல்லாக்கும் புதியநோய்

புராதனகதைகளில் "கல்லாய்ச் சமைந்து போனார்கள்" என்று சொல்லப்பட்டவைகள் இப்பொழுது உலகில் நடந்து வருவதைக்காண அவைகள் உண்மையெனத் தெரியவருகிறது கல்லாய்ச் சமைந்து போவது ஓர்வித நோயாகும்

உலகெங்கும் 28 பேர் இதுவரை கல்லாய்ச் சமையும் ஒருவகைப் புதிய கால்ஸினோஸிஸ் வியாதியால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இத்தகைய வியாதிக்கு லாஸ் ஆஞ்சலீஸைச் சேர்ந்த டாக்டர் ஹாரி வாக்கர் என்ற இளைஞர் ஒரு புதிய சிகிச்சை முறையைக் கண்டுபிடித்திருக்கிறார். உணவைச் சரிப்படுத்திக் கொள்வதுதான் அந்தச் சிகிச்சை முறை இரண்டு மாதங்களுக்கு முன்னர் மிஸ் ரோலா பிரேப்பிட்டன் என்ற 23 வயதுள்ள அழகிய பெண் இந்த வியாதிக் காளாயினாள். அவள் சித்திரக்காரிகளுக்கு மாதிரி "மாடல்" ஆக நிற்பவள் நாளடைவில் அவள் கைகளும் கால்களும் பனிக்குக் கற்கள்போல இறுகிச் சில்லிட்டுச் சற்றும் உணர்ச்சியற்றுக் கல்லாய்ப் போய்விட்டன. அவளுக்கு டாக்டர் வாக்கர் சிகிச்சை செய்தார். தம் தோட்டத்தில் சுண்ணாம்பு நிலத்தில் விளையும் காய்கறிகளைக் கொண்டு அவர் சிகிச்சையை ஆரம்பித்தார். மிஸ் பிரேப்பிட்டன் இந்தக் காய்கறிகளையே உணவாகச் சாப்பிட்டாள். அதனால் அந்தப் பெண்ணின் நோய் குறைந்து இப்போது நடக்கவும், கைகளை அசைக்கவும் சக்தி பெற்றிருக்கிறாள். இன்னும் அபிவிருத்தியடைந்து கொண்டே வருகிறாள்.

### தீர்மானம் தோற்றது.

வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறித்த சர்க்கார் நடைமுறையைக் கண்டித்து சென்றவாரம் காமன்ஸ் சபையில் தொழிற்கட்சியினர் கொணர்ந்த தீர்மானம் தோற்றது. 450 பேர் பாதமாகவும், 76 பேர் சாதமாகவும ஓட்டுக் கொடுத்தார்கள்-

### 2000 பேர் மரணம்.

#### சீனாவில் நேர்ந்த விபத்து.

பெங்செஸ் நகரில் பெருவெள்ளம் புகுந்துவிட்டது. ஈராயிரம் பேர் இறந்திருப்பரென்று சீனாவிலிருந்து வந்த செய்திகளிலிருந்து தெரிகிறது.

### காங்கிரஸ் காரியசபை.

காங்கிரஸ் மஹா சபையின் காரியச் சபைக்கூட்டம் வார்தாவில்ஜூலை 29, 30-ந் தேதிகளில் கூடுமென யுனைடட் பிரஸ் அறிவிக்கிறது

ராஜேந்திரபாபு சென்ற 11ம்தேதி மஹிளா வித்தியா பீடத்துக்குப் புறப்பட்டார். அங்கிருந்து அவர் சாப்ராவுக்குச் சென்று மீண்டும் புராலியா என்ற விடத்துக்குப் போய் அங்குபடுத்த படுக்கையாக இருக்கும். ஸ்ரீமான் நிர்ணயதாஸ் குப்தா என்ற காங்கிரஸ்தலைவரைக் காண்பார்; அங்கிருந்து அவர் பாட்னாவுக்குத் திரும்புவார்.

### காங்கிரஸ் அங்கத்தினர்.

சென்னை மாகாணத்தில் இதுவரை 55 ஆயிரம் காங்கிரஸ் அங்கத்தினர் சேர்ந்திருக்கின்றனர்.

| | |
|---|---|
| கூர்ஜரம் | 24,027 |
| வங்காளம் | 5000 |

### வில்லிங்டன் பிரபுவின் காணிக்கை.

சீக்கியரின் புண்ணியதலமாகிய அமிர்தசரிலுள்ள தங்க ஆலயத்துக்கு லார்டு வில்லிங்டன் ஜூலை 5-ம் தேதி விஜயஞ் செய்தார்: லார்டு கர்ஸானுக்குப் பிறகு விஜயஞ் செய்த இந்திய வைசிராய் லார்டு வில்லிங்டனேயாவர். லார்டு வில்லிங்டன் தம்பதிகள் பாஞ்சால கவர்னருடன் கோயிலுக்கு விஜயஞ்செய்தது மிகவும் குறிப்பிடத்தக்க செய்தியாகக் கருதப்படுகிறது. தங்க ஆலயத்திற்கு லார்டு வில்லிங்டன் 101 ரூபா காணிக்கையாகவும் அகாடியாகாட் ஆலயத்திற்கு 51 ரூபா காணிக்கையாகவும் செலுத்தினர்.

கோவில் மரியாதைகான சரோபம் என்ற ஜரிகைப்பரிவட்டம் வைசிராய் தம்பதிகளுக்கு அளிக்கப்பட்டன.

### இந்தியா சட்டசபை.

இந்தியா சட்டசபை அங்கத்தவர்கள் பலர் பல கேள்விகளைக் கேட்பதாக அறிவித்தல் கொடுத்திருந்தபோதிலும் ஐரோப்பாவிலிருக்கும் அக்கிராசனர் திரும்பி வரும்வரை அவற்றைச் சேர்த்துக்கொள்ள முடியாது. கேள்விகளும் தீர்மானங்களும் சேர்க்கப்பட்டபின்பே அவை சம்பந்தமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும். ஆனால், பல இலாகாக்களும் இந்தியா சட்டசபை இலாகா சமர்ப்பித்த கேள்விகளுக்குப் பதிலைத் தயாரித்து வருகின்றன. அக்கிராசனர் அனுமதி கொடுத்தவுடன் இந்தியா சட்டசபைக் கூட்டத்தில கேள்விகளுக்குப் பதிலளிக்க இயலுமாறு செய்வதற்காக இலாகாக்கள் தற்போது பதிலைத் தயாரித்து வருகின்றன.

# நமது சிறுகதைப் பகுதி.

## அரவாமுதன்

அல்லது

## அதிர்ஷ்டத்தால் கிடைத்த ஆரணங்கு

"களாபினி" வரைவது.

நண்பா! கைக்கு எட்டிய கனி வாய்க்கு எட்டுகிறட்டில் நிச்சயமில்லை என்று சொல்வார்களல்லவா? அது என் விஷயத்தில் மெய்யாகிவிட்டது; எனினும் நான் நம்பிக்கையை அடியோடு இழந்துவிடவில்லை. உன்னுடைய உதவிமட்டில் எனக்குப் பூரணமாக இருக்குமாயின் நான் உலகத்தையே வென்று விடுவேன்.

"ஜயந்தா! நீ புதிர்போட்டுப் பேசுவது எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை; என்ன சொல்லப்போகிறாய்? அதைத்தான் சொல்லித் தொலையேன்!"

"ஒன்றும் பிரமாதமான விஷயமில்லை மனதுவைத்தால் ஆகக்கூடாதது கூட ஒன்றிருக்கிறதா? சொல்கிறேன் கேள். வலங்கைமான் ராமச்சந்திர ஐயருடைய பெண் கற்பகத்தைத் தெரியுமல்லவா உனக்கு அவளை எனக்கு மணஞ்செய்து கொடுப்பதாக முதலில் முடிவுசெய்திருந்தார்கள் இன்றையமாலை நிச்சயத் தாம்பூலம் கொடுப்பதென ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதைக் கற்பகத்தின் தாயார் தடுத்துவிட்டாள்.

ஏன் தடுத்தாள்? கற்பகத்தை உனக்கு மணம் செய்துகொடுக்க முதலில் அவளும் சம்மதித்தாளல்லவா?"

"ஆம்! எனக்கு ஏராளமான சொத்திருக்கின்றதென்று அவள் முதலில் நினைத்தாளாம். ஏராளமான கடன் எனக்கிருக்கின்றது என்ற விஷயம் நேற்று காலைதான் அவளுக்குத் தெரியவந்ததாம். இன்று மாலையில் நிச்சய தாம்பூலம் கொடுக்கச் செல்வதற்கென புதிய புடவைகளும், வெற்றிலை பாக்கு முதலிய சாமான்களும் நான் வாங்கிவைத்தேன். காலை சுமார் பத்துமணிக்கு கற்பகத்தின் தாயார் வலங்கைமானைச் சேர்ந்த ஒருவர் மூலமாக ஒரு கடிதத்தையனுப்பியிருந்தாள். அதில் கற்பகத்தை எனக்கு மணம் செய்துகொடுக்கத் தனக்கு விருப்பமில்லையென்றும் காரணம் என்னவென்று கேட்கவேண்டாம் என்றும் எழுதியிருந்தாள்!"

"சரி! இப்பொழுது என்னை என்ன செய்யவேண்டுமென்கிறாய்?"

சொல்லுகிறேன் அவசரப்படாமல் கேள். எனக்கு மாமன் ஒருவருண்டென்பதும், அவர் பால்யத்திலேயே பர்மாவிற்குச் சென்று விட்டாரென்பதும் உமக்குத் தெரியுமல்லவா? நீ அவரைப்போல நடிக்க வேண்டும். அவருக்கு இப்பொழுது சுமார் நாற்பது வயதிருக்குமென்று என தாயார் கூறியிருக்கிறாள். உனக்கும் நாற்பது வயதிற்கு மேல் மதிக்கமுடியாது. என்து மாமன் தனது பதினைந்தாம் ஆண்டிலேயே பர்மாவிற்குச் சென்றுவிட்டாராதலின் அவர் இப்பொழுது எப்படியிருப்பாரென்று ஒருவருக்கும் தெரியாது. ஆதலால் நீ என்னுடைய மாமனல்லவென்று எவரும் கூற மாட்டார்கள்.

"சரி! நான் உன்னுடைய மாமனாக நடிப்பதால் நீ அடையக்கூடிய பலனென்ன? கற்பகமும், கற்பகத்தின் சொத்தும் உனக்குக் கிட்டிவிடுமா?

"ஆம்! நீ மட்டில் திறமையுடன் நடித்தால் கற்பகம், என் மனைவியாகிவிடுவதும், அவளுடைய சொத்தில் பாதிப்பாகம் உன்னுடையதாகி விடுவதும் நிச்சயம்! நீ ஓர் பெரிய தனவந்தனைப்போலவும், உன்னுடைய சொத்துக்களையெல்லாம் எனக்கே எழுதிவைத்துவிடப் போகிறாய் போலவும் நடிக்கவேண்டும். இது கற்பகத்தின் தாயாருடைய காதிற்கு நிச்சயமாக எட்டும்! அதன்பின்னர் நம்முடைய பாடு குஷால்தான்.

"சரி! இந்த நாடகமெல்லாம் எத்தனை நாட்களுக்கு நிலைத்துநிற்கும்? உண்மை வெளியாகிவிட்டால் என்னசெய்வது?

"அதைப்பற்றி உனக்கு ஏன் கவலை தாலி கழுத்திலேறியபின் வேறு யோசனையென்ன? என்னுடைய கல்யாணம் முடிவடைந்தும் பர்மாவிலிருந்து அவசரமாக வரும்படி ஓர் தந்தி வந்திருப்பதாகக் கூறிவிட்டு நீ உன்னுடைய வேஷத்தைக் கலைத்துவிடு. இரண்டொரு வாரத்திற்குப் பின் உன்னுடைய வங்கி முறிந்துவிட்டதாகவும் நீ தற்கொலை செய்துகொண்டுவிட்டதாகவும் பிரஸ்தாபத்தைக் கிளப்பி நான் சமாளித்துக்கொள்கிறேன். பொய்சொல்வது எனக்கும் உனக்கும் ஒருபிரமாத விஷயமா!

இவ்வளவும் கும்பகோணம் சாரங்கபாணி சன்னதித்தெருவின் மூலையிலுள்ள மொட்டைக் கோபுரத்தினருகில் நடந்தது. ஜயந்தனுடைய மாமனைப்போல் நடிப்பதாக அரவாமுதன் ஒப்புக்கொள்ளவே இருவரும் ஓர் வாடகை மோட்டாரிலேறி தில்லையம்பூர் கிராமத்திற்குப் பயணமானார்கள்.

"ஆமாம்! பர்மா வியாபாரி, பெருத்த தனவந்தன் என்றால் கையில் ஒரு மணி பர்ஸ் காலில் பூட்ஸ், நேர்த்தியான உடை; இவைகளெல்லாம் வேண்டாமா? நான் இந்த அழுக்கடைந்த உடையுடன் வந்தால் என்னைத் தனவந்தனென எவரேனும் நம்புவார்களா?" என்றான் அரவாமுதன்

"எல்லாம் வாங்கிக்கொடுக்கிறேன் மோட்டார் கடைவீதி வழியாகத் தானே செல்லப்போகிறது!" என்றான் ஜயந்தன்.

அன்றுமாலை சுமார் நான்கு மணிக்கு தில்லையம்பூர் கிராமத்திலுள்ள ஜயந்தனுடைய வீட்டில் இருவரும் வந்திறங்கினார்கள் ஜயந்தனுடைய தாயாருக்குக் கண்கள் கொஞ்சம் மழுங்கலாகையால் அரவாமுதனை பர்மாவிற்குச் சென்ற தனது சகோதரனே என்று விரைவில் நம்பிவிட்டாள். அரவாமுதன் புதிய உடையில் உண்மைச் சீமானைப்போன்றே தோன்றினானாதலின் கிராமவாசிகளும் அவனையோர் கோடீஸ்வரனென நம்பிவிட்டார்கள்,

தன்னைப்பார்க்க வந்தவர்களிடமெல்லாம் அரவாமுதன் பர்மா வியாபாரத்தைப்பற்றியும், பர்மாவின் எழில் மிகுந்த வீதிகளைப் பற்றியுமே பேசினான்.

"ஆமாம்! மருகித் தெருவில் என்னுடைய மருமகன் இருக்கின்றானே அவனை உங்களுக்குத் தெரியுமா?" என்றார் ஒருவர்.

அரவாமுதன் சற்று யோசனைசெய்துவிட்டு "தெரிந்திருக்கும். எனக்கு அங்கு எவ்வளவோ நண்பர்களைத் தெரியும் ஆனால் பாதி நண்பர்களுடைய பெயர்கள் எனக்குத் தெரியாது என்று கூறித் தப்பித்துக் கொண்டான்.

இந்த சமாசாரங்களெல்லாம் கிராமம் முழுவதிலும் பரவி ஆறு மைல்களுக்கப்பால் வலங்கைமானிலுள்ள கற்பகத்தின் வீட்டாருக்கும் எட்டியது. அப்புறமேனும் கூற வேண்டுமா? ஜயந்தனுக்கு அவனுடைய மாமனின் மூலமாக ஏராளமான சொத்துக் கிடைக்கப்போகிறதென்ற விஷயம் தெரிந்தவுடன் அவனுக்குக் கற்பகத்தை மணம் செய்துகொடுப்பதென்பது தீர்மானமாகி அடுத்த மாதம் 10-ம் தேதியன்று விவாகத்தை நடத்திவிடுவதென்றும் ஏற்பாடாயிற்று.

கற்பகத்திற்குத் தந்தையில்லை. அவளுடைய மாமன்தான் சொத்துக்களையெல்லாம் பரிபாலித்துக்கொண்டு வருபவன். அவனுடைய பெயர் ரங்கநாதன் என்பது. ரங்கநாதனும், அரவாமுதனும் இணைபிரியா நண்பர்களாகி விட்டார்கள்: அரவாமுதன் தனது சொத்துக்களைப்பற்றி அடிக்கடி ரங்கநாதனிடம் பேசியவாறாகவே யிருந்தான். ரங்கநாதனும் மதிமயங்கிப்போய் அரவாமுதன் சொல்வதெல்லாம் நிசமெனக் கருதி வந்தான். இவ்வாறே நாட்கள் சென்றன

ஒருநாள் ரங்கநாதனும், அரவாமுதனும் பேசிக்கொண்டிருக்கையில் ஒருவன் சினிமா நோட்டீஸ் கொடுத்துக்கொண்டு சென்றான். ரங்கநாதன் ஒருநோட்டீஸ் வாங்கிப் பார்த்துவிட்டு "நல்லதங்காள் மிகவும் நேர்த்தியான நாடகம்! அதைக்கூடவா படமெடுத்துவிட்டார்கள்? நாம் அதை அவசியம் பார்க்க வேண்டும். கற்பகத்திற்குப் பேசும்படமென்றால் ஒரு தனிப்பிரியம். அவளுடைய ஆவலைப் பூர்த்திசெய்வதற்காக நாங்கள் அடிக்கடி கும்பகோணம் போய்வருவதுண்டு" என்றார்.

"அதற்கென்ன இன்றிரவு போகலாமே" என்று தாராளமாகப் பதிலளித்தான் அரவாமுதன்.

"நாங்களும வரலாமா?" என்று கூடவிருந்த மற்றொருவர் கேட்டார்.

"தாராளமாக வாருங்களேன்" என்றார் அரவாமுதன். —தொடரும்.

('வீரகேசரி' வாரப்பதிப்பு.)

# மாகாணத்தலைவரும் சுருட்டுத்தொழிலும்.

## அழிந்துபோகாமைக்கு அவரின் ஆலோசனை! யாழ்ப்பாணத்தில் குற்றங்கள் ஓங்குகின்றன.

### மாகாணத்தலைவர் அறிக்கை விபரம்.

வடமாகாணத் தலைவர் 1934-ம் ஆண்டிற்குரிய தம் பரிபாலன அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். அதிற் பலருசிகரமான விஷயங்கள் காணப்படுகின்றன.

புகையிலை சம்பந்தமாக மாகாணத் தலைவர் பின்வரும் கருத்துப்பட எழுதுகின்றார்:—

மலையாளப் புகையிலையே இக்குள்ளார்க்கு அதிகம் ஊதியம் பயப்பதாயிருந்துவந்தது. இது சிலகாலம் மிகவும் துக்ககரமான நிலைமையில் இருந்தது. எனினும் மலையாளப் புகையிலை வியாபார ஐக்கியசங்கம் ஸ்தாபிக்கப்பட்டபின் இவ்வர்த்தகம் சற்றுத் தலை கிமிர்ந்திருக்கிறது எனலாம்.

"இச்சங்கம் மலையாளத்தில் ஓர் பிரதிநிதியை நியமித்திருக்கிறது. சங்கம் அனுப்பும் புகையிலையை விற்பதற்கு இப் பிரதிநிதியே பொறுப்பாளியாவர். இதனால் போட்டியும் தரகன் கொடுமையும் குறைந்திருக்கின்றன. புகையிலைத் தொழிலுக்கு மிக்க நன்மை பயப்தான இச்சங்கத்தில் எல்லாப்புகையிலை விவசாயிகளும் சேர்வார்கள் என நம்பப்படுகிறது.

"வெள்ளைப் பேர்ளிப் புகையிலைச் செய்கை நன்கு நடந்து வருகிறது. 1934-ம் ஆண்டில் இப்புகையிலை வர்த்தகத்திற்கான ஐக்கியசங்கம் 86 விவசாயிகளிடம் இருந்து 22708 இறாத்தல் வெள்ளைப் புகையிலையை வாங்கி இங்கிலாந்திற்கனுப்பியது. 1933-ம் ஆண்டில் 15175 இறாத்தல் புகையிலையையே அனுப்பியது.

சுருட்டுக்கைத் தொழில் மிகவும் மங்கும் நிலைமையில் இருக்கிறது. சுருட்டுமுதலாளிமார் "காலத்திற கேற்றவாறு, நவீன முறையில் மலிவாகத் தம் சரக்கை உற்பத்தியாக்காவிட்டால் இக்கைத்தொழில் உஜ்ஜீவிக்குமோ என்பது சந்தேகமே! முதலாளிமார் சுருட்டுப் புகைப்போரின் விருப்பத்திற் கேற்றவாறு தம் சரக்கை ஆக்குதல்வேண்டும்',

வடமாகாணத்தில் பனைமரங்கள் நாசம் செய்யப்படுவது சம்பந்தமாக மாகாணத் தலைவர் (மிஸ்டர் எட்மன்ரெட்ரிக்கோ) பின்வரும் கருத்துப்பட எழுதுகிறார்:—

முற்காலத்தில் இந்த யாழ்ப்பாணத்தில் பனையொன்றினால்தான் பஞ்சங்கள் ஏற்படவில்லையாம். பனம்பொருள்கள் அக்காலத்திருந்தவர்க்குப் பல விதமாகப் பயன் அளித்தன. இப்போது சிலகாலமாக இத்தப்பனைமரங்களைத் தறித்து அக்கியநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றார்கள். 1933-ம ஆண்டில் 10,767 பனைநிராந்திகள் அனுப்பப்பட்டன. ஆனால் 1934-ம் ஆண்டில் இத்தொகை 14994 ஆகக் கூடிவிட்டது.

"இங்கே ஒவ்வோர் காலத்தில்தான் பழங்கள் கிடைக்கின்றன. மாம்பழமும் வாழைப்பழமும் தான் வியாபாரம் செய்யப்படுகின்றன."

யாழ்ப்பாணத்திற் குற்றங்கள் அதிகரித்ததைப்பற்றி மாகாணத்தலைவர் தமது அறிக்கையிற் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:—

யாழ்ப்பாணம் சுப்பிறீம் கோட்டில் பெண் களவு சம்பந்தமாக விதிக்கப்பட்டுள்ள கடுந்தண்டனை பெண்களைக்கடத்தும் குற்றங்கள் சம்பந்தமானவற்றிற் பயன கிடைத்திருக்கின்றனவேனும் தலைமைக்காரராற் சமாளிக்க முடியாதவாறு இங்கே குற்றங்கள் அதிகரித்திருக்கின்றன.

"சில குற்றங்களுக்கு மோட்டக்காரின் உதவி கிடைக்கின்றது. மோட்டர்க்கார் உதவிகொண்டு நடைபெறும் குற்றங்களைக்கண்டு பிடிப்பதும் சற்றுக் கஷ்டமாயிருக்கின்றது.

"யாழ்ப்பாணப் பிரிவிலுள்ள பொலீஸ் நீதிஸ் தலங்களில் தொடரப்பட்ட வழக்குகளின் தொகை 13,009. 1933-ம் ஆண்டில் இவற்றின் தொகை 14890. வழக்குகள் குறைந்தாலும் சரீர தீங்கு பொருள் தீங்கு என்பன அதிகரித்துக்கொண்டுவருகின்றன.

"1933-ம் ஆண்டில் நிகழ்ந்த கொலைகள் 12. 1934-ம் ஆண்டில் நிகழ்ந்த கொலைகள் 20.

"1934-ம் ஆண்டு முதற்பாகத்தில் பெண்களவுகள் அதிகமாக நிகழ்ந்தன. ஆனால் சுப்பிறீம்கோட்டார் இவ்வழக்குகளில் கடுந்தண்டனை விதித்தபின், இவ்வாண்டின் பிற்பகுதியில் பெண்களவு ஒன்றேனும் நிகழவில்லையெனவாம்.

"கொள்ளை, வீடுடைத்துக் களவெடுத்தல், சாதாரணகளவு என்பன அதிகரித்துவருகின்றன என்பது பின்வரும் புள்ளி விபரங்களினால் அறியலாகும்:

| | 1932 | 1933 | 1934 |
|---|---|---|---|
| வீடுடைத்துக்களவ. | 76 | 94 | 123 |
| கொள்ளை, | 148 | 161 | 193 |
| சாதாரணகளவு | 279 | 281 | 328 |

கோவிலில் யந்திரக்களவுகள் மீண்டும் இவ்வாண்டில் தலைகாட்டியிருக்கின்றன. 14களவுகள் அறிவிக்கப்பட்டன."

# சங்கானையில் தபாற் கந்தோர்.

—(0—

## இப்போதுள்ள வசதிக்குறைவு.

### மகா கூட்ட வரலாறு.

—(0)—

(நமது நிருபர்)

சென்றவாரம் சங்கானைச் சந்தைக்கு அணித்தாகவுள்ள "கிளப்" இல்லத்தில் ஓர் மகா கூட்டம் கூடியது. மிஸ்டர் நெவின்ஸ் செல்வத்துரை அவர்கள் தலைமை வகித்தார்.

சங்கானையில் தற்போதுள்ள உபதபாற் கந்தோரின் வசதியின்மையைப் பற்றியும் ஓர் பெரிய தபாற்கந்தோர் ஸ்தாபிப்பதைப் பற்றியும் பேசுவதற்காகவே இக் கூட்டம் கூட்டப்பட்டது.

மிஸ்டர் எவ். ரீ. ஜோன் அவர்கள் சங்கானையில் உள்ளவர்கள் போதிய தபாற்கந்தோர் வசதியின்மையால் படுங் கஷ்டங்களைப் பற்றிப் பேசினார். இலங்கையின் மிகப் பெரிய கிராமங்களில் ஒன்றாய சங்கானையில், ஓர் ஐக்கிய வங்கி, 2 தவறணைகள் 2 அரிசி குற்றும் யந்திரசாலைகள் 7000 சனத்தொகைகொண்ட ஓர் பெரிய கிராமத்தில், 150 ரூபாவுக்குமேல் கொடுக்கல் வாங்கல் செய்யாத ஓர் உப தபாற்கந்தோரால் ஆம் பயன் இல்லையென்னும் இன்னோரன்ன பல விவாதங்களை மிஸ்டர் ஜோன்ஸ் எடுத்துக் காட்டினார்.

அரசினர் பொறுப்பில் நிரந்தரமான ஓர் வைத்தியசாலையும் இங்கே இருத்தல் வேண்டுமென ஸ்ரீ கே. கந்தையா அவர்கள் பேசினார். இதன்பின் தபாற்கந்தோர், வைத்தியசாலை என்பன சம்பந்தமாக இரு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

# நாற்றிசை நோக்கு.

('வாஸவன்' வரைவது.)

ஓர் பசும்புற்றரையில் ஒட்டகமொன்று ஒருநாள் மேய்ந்துகொண்டு தன்பாட்டில் நின்றது; அதன் மூக்கணாங்கயிறு அதன் பின்னால் நிலத்திற் கிடந்தது; இவ்வாறு இருப்ப, அவ்வழியால் வந்த ஓர் அற்ப எலி அந்த மூக்கணாங் கயிற்றின்மீது உட்கார்ந்து கொண்டது. ஒட்டகம் மேய்ந்து மேய்ந்து முன்னேறிச் செல்ல மூக்கணாங் கயிறும் அதன்மீதிருந்த எலியும் இழுபட்டுக் கொண்டே ஒட்டகத்தின் பின் சென்றன:

X X X

கயிற்றின் மீதிருந்த அற்ப எலி பின் வருமாறு எண்ணத் தொடங்கியது: "ஆகா என் பராக்கிரமமே பராக்கிரமம்! என் வலிமையே வலிமை! இந்தப் பெரிய ஒட்டகத்தை நான் தானே இந்தக் கயிற்றைப் பிடித்து ஓட்டுகிறேன்: நான் தானே அதற்கு வழி காட்டுகிறேன்!" கேவலம்: அற்ப எலியின் மமதையை ஒட்டகம் ஒருவாறு உணர்ந்து கொண்டது. எனினும் ஒன்றுமறியாததைப்போல அது மேய்ந்து கொண்டே ஒரு சுனையை அடைந்தது.

X X X

சுனையைக் கடந்தே அக்கரை செல்ல வேண்டும். ஒட்டகம் மெல்லச் சுனைக்குள் இறங்கித் திரும்பிப் பார்த்தது. எலிப்பிள்ளை கயிற்றை விடுத்துச் சுனைக்கரையிற் குந்திக் கொண்டிருந்தது. "ஐயா, பராக்கிரம சாலியாகிய எலியாரே! எனக்கு வழிகாட்டிய எலியாரே! என்னை அக்கரை சேர்க்க வழிகாட்டியருளாது இப்படி இடைவழியில் என்னை விடலாமா" என்று ஒட்டகம் தாழ்மையுடன் எலியைக் கேட்டது; உந்தச் சுனையைக் கடத்தல் என்னால் இயலாது என எலி பதில் கூறியது: "ஆயின் தண்ணீர் முழங்கால் வரைக்கும் தான் இருக்கிறது; தயை புரிந்துதாங்கள் எனக்கு கரையேறும் மார்க்கங் காட்டியருளல் வேண்டும் என ஒட்டகம் மீட்டும் மிக்க பணிவுடன் இரந்தது 'ஐயா, ஒட்டகமே! உமக்கு முழங்கால் வரைக்குந்தான் தண்ணீர் நிற்கின்றது என்பது வாஸ்தவமே! ஆனல் உனக்கும் எனக்கும் பெரும் வித்தியாசம் உளது என்பதைத் தாங்களே அறியவில்லையோ! தாங்களே தயைபுரிந்து என்னையும் தங்கள் முதுகில் ஏற்றி அக்கரை சேர்க்கவேண்டு"மென எலி மன்றாடியது.

X X X

"நின் இறுமாப்பை இன்றே ஒழிப்பாயாக: தராதரங்கண்டு இறுமாப்படைதல் வேண்டும்: அற்பவாழ்வும், அற்ப திரேகமும் உடைய முந்தைநாள் வந்த நீ என் போல்வாருடன்,நினக்குச்சகலவிதத்தாலும் மிஞ்சியவருடன் சமத்துவம் பாராட்டி அவர்களுக்கு வழிகாட்டுவான்போல இறுமாப்புக் கொள்ளாதே! அவர்களை எள்ளாதே" என்று ஒட்டகம் அவ் வற்ப எலிக்கு இடித்துரைத்து அதனை இதன் முதுகிலேற்றி அக்கரை சேர்த்தது இது அடியேன் சிறுபாயத்திற் படித்த ஓர் கதை.

X X X

நமது ஈழகேசரிக்கு ஆறுவது ஆண்டு பிறந்து விட்டது. தற்காலம் தமிழுலகிற் றோன்றி வாசிற்கும் பத்திரிகைகளுக்கு உள்ள பாலாரிஷ்டம் முதலியன வின்றி ஒருவாறு இப்பத்திரிகை இனிது நடந்து வருவது பற்றி யான் அதன் நிர்வாகிகளைப் பாராட்டுகின்றேன். ஈழகேசரி தன் பெயருக்கேற்ப இலங்கைவாழ் மக்கள் யாவர்க்கும் விசுதந்திர தாகம் ஊட்ட வேண்டுமேயன்றி வேசரி என எல்லை கடந்து கர்மம் ஆற்ற மாட்டாது என்பதே எனது நம்பிக்கை. அதுவேசரி.

X X X

ஆறுவது ஆண்டு முதலாம் பகுதிப் பத்திரிகையில் ஈழகேசரியின் ஆசிரியர் அவர்கள் தம் பத்திரிகை சம்பந்தமான ஓர் கட்டுரை வரைந்துள்ளார். அப் பத்திரிகையின் லட்சியம் அது அடைந்துள்ள முன்னேற்றம் என்னும் இன்னோரன்ன வற்றைப் பற்றியும் எழுதி மற்றப் பத்திரிகைகளைப் பற்றிப் பின்வருமாறு அவர் தீட்டுகின்றார்:—

"பத்திரிகைகளுக்கிடையில் சிற்சில விஷயங்களில் பொருமை ஏற்படுவதும் வழக்கமான காரியம். நமது பத்திரிகை தோன்றியபின் அநேக பத்திரிகைகள் விழிப்படைந்ததும் உண்மையே. டமும்பாடங்களைப் படித்துச் சென்றால் அதை ஒருவருக் கேட்கலாகாது என்று எண்ணித் தோற்றத்திலும் நோக்கத்திலும் மாற்றமும் திருத்தமுமடைந்த சில பத்திரிகைகளும் உள. நமது பத்திரிகை. தனது விருத்தியுடன் மற்றைய பத்திரிகைகளுக்கும் புத்துயிர் கொடுத்து உல்லாசமாகச் செல்லப் பண்ணுகின்றது என்று சொல்லினுஞ் சாலும். இதுவும் ஒரு பெரிய தொண்டே"

X X X

ஷ்டி பத்திரிகை ஆசிரியரின் குறிப்பை நோக்கியதும் எனக்கு ஓர் ஆசங்கை பிறக்கலாயிற்று. இந்த ஈழகேசரி இற்றைக்கு 6 ஆண்டுகளுக்கு முன் இந்த யாழ்ப்பாணத்தில் அந்தச் சன்னாகத்தில் தோன்றி இருக்காவிட்டால் உதயதாரகை (95 வருஷம்) இந்துசாதனம் 48)சத்தோவிச்கவேதபாதுகாவலன் (60) வீரகேசரி (8 சுதேசநாட்டிபமென்னும இப்பத்திரிகைகளின் கதி என்னய் விடுமோ? ஈழகேசரி ஒன்று அவதாரஞ் செய்திருக்காவிட்டால் ஷ்டி பத்திரிகைகள் யாவும் அதோகதி அடைய வேண்டுந்தான்! எனவே ஷ்டி பத்திரிகைகளின் நிர்வாகிகள் யாவரும ஈழகேசரிக்கும் அதனைத் தாபித்தவர்க்கும் நன்றியறிதல் உடையவராய் இருத்தல் வேண்டுமென யான் சிபாரிசு செய்கின்றேன்.

X X X

விசாலமான தடாகத்தில் அழகிய செந்தாமரை மலர்வதைக் கண்டு அருகே கொட்டியும் மலர்கின்றது! ஆதித்தன் மறையா ஏகசக்கிராதிபத்தியங் கொண்டுள்ள ஜோர்ஜ் மன்னனைக்கண்டு அற்ப தேசமாம் அல்பானியாவின் மன்னர் மறைந்திருக்கவில்லை. முன்னேற்றமடையும் ஈழகேசரியைக்கண்டு இந்துசாதனம், உதயதாரகை, பாதுகாவலன், வீரகேசரி, தினகரன் என்னும் பத்திரிகைகள் மறையப் போவதில்லை.

X X X

ஈழகேசரியின் ஆசிரியரை அடியேன் நன்கு அறிவேன: அச்சியந்திர சாலைகள் விஷயத்தில் அவர் போதிய பயிற்சியும் அநுபவமு முடையவர். எனவே அவர் தம் மேற்பார்வையின் கீழ் ஈழகேசரி முன்னேறுமென்பதற்கு என்ன தடை!

X X X

ஈழகேசரி ஆசிரியர் தம் கூற்று மற்றும் பத்திரிகை ஆசிரியர்களுக்கு ஒருவேளை மனக்கொதிப்பை உண்டாக்குமோ அதனால் பத்திரிகைகளில் சொற்போர் ஆரம்பித்து விடுமோவென அடியேன் அஞ்சியிருந்தேன். ஆனல் அதிர்ஷ்ட வசமாக ஏனைய பத்திரிகை ஆசிரியர்கள் எவரும் இது விஷயத்தைப் பற்றிச் சிந்திக்கவில்லை!

X X X

யானையோ பலமான மிருகம்: சாகபட்சணி: அற்ப பன்றியைக் கண்டால், அது விலகிச் செல்லும் என்பர். இதுபோலவே அற்பர்கள் இறுமாப்படைந்து வாதுக்கு அழைத்தாலும பெரியோர அதனைப் பொருட்படுத்தாது தம் கடமையைச் செய்வார்? "பேதையரைக் கண்டாற் பெரியோர் வழிவிலகி நீதியொடுபோதல் நெறியன்றோ காதுமத—மாகாதயானை வழிவிலகல் புன்மலத்தின் சூகரத்துக் கஞ்சியோ சொல்"


## விளம்பரம்.

நா. கந்தையா
வெந்தீஸ் மேஸ்தரும்
கோட்டுவிற்பனவு
கொம்மிஷனரும்.

கொட்டடி,
யாழ்ப்பாணம்.

(M. 3-6to 31-12-55.)



# Nethrananda Thailaya.

**Ceylon's Premier Curative Medicine Oil.**

## நேத்திரானந்த தைலம்.

இலங்கையில் மிகவும் சித்திபெற்ற மருந்து எண்ணெய்களில்
இதுவே முதற்றரம். 6 அவுன்ஸ் போத்தல் விலை
ரூ 2-50, தபாற்கூலி 45 சதம்.

இது சிரசில் உண்டாரும் மண்டையிடியை ஐந்துநிமிஷத்துக்குள் நீக்குவதோடு கண்ணில்உண்டாகும் சகலஎரிச்சல், மங்கலான பார்வை நீர்வடிதல், சதைபடர்வு என்னும் சகல கண் வியாதிகளையும், தலைமயிர் உதிர்தல், தலை மொட்டை, தலை நரை, பீனிசம் என்பவைகளையும் போக்கி தலைமயிரை நீளமாய் வளரச்செய்து பளபளப்பையும்கொடுக்கிறது. இதை உபயோகித்தால் கண்ணுடிபோடத் தேவையில்லை. சிறியோரும், பெரியோரும் வயது வித்தியாசமின்றி உபயோகித்து வேண்டிய சுகம் பெறக்கூடும்.

இலங்கையிலுள்ள கனவான்களாகிய பெரிய உத்தியோகத்தர்களும் வியாபாரிகளும் சிமான் சிமாட்டிகளுமான யாவரும் அச்சமின்றி உபயோகித்து இதன் அரிய குணத்தைக் கண்டிருக்கிறார்கள். வெளிவந்திருக்கும் ஏனைய போலித் தைலங்களைப்போல இதை நினையாமல் உடனே வாங்கி உபயோகியுங்கள்.

மனிதர் முக்கியமாகத் தெரிந்துகோள்வதும், மாதர் அதிகமாக விரும்புவதும்
35 வருஷங்களாக யாவராலும் அதிகமாகப் புகழப்படுவதும்

### இந்த நேத்திரானந்த தைலமே.

இந்த சிறந்த எண்ணெய்க்கு நீண்ட பெயர் உண்டு என்று ஊர்ந்து திரிகிற ஒவ்வொரு சிறுபிள்ளைக்கும் தெரியும். சிரசில் ஏற்படுவதான தலை மயக்கம், கண் எரிவு, தலைவலி, இளநரை, தலை வழுக்கை, தலைமயிர் உதிர்தல் முதலிய எந்த வியாதிக்கும இது ஏற்ற நிவாரணி என்று பலரும் அறிந்து உத்தரவாதம் செய்யப்பட்டது. நேத்திரானந்த தைலத்தினால் யாவும் சுகமாக்கப்படுகிறது. இது தற்காலத்தில் செய்யப்படும் போலித் தைலங்களைப் போலல்ல இலங்கையிலும் பிரதேசங்களிலும் நன்கு பரீக்ஷிக்கப்பட்டுள்ளது.

இலங்கைச் சட்டசபை மெம்பர்கள்
இவ்வபூர்வமான தைலத்தைப்பற்றிக் கூறுவதைக் கேளுங்கள்.

கனம் சி. டபுள்யூ. டபுள்யூ. கன்னங்கார எம். எல். சி.:—உங்களது நேத்திரானந்த தைலம் தலைக்கும் கண்களுக்கும் மிகுந்த குளிர்ச்சியை அளிக்கின்றது.

கனம் பி. பி. ரம்பூக் வெல்லா எம். எல். சி.:—உங்களது நேத்திரானந்த தைலம் தலைவலியையும் அதுபோன்ற வியாதிகளையும் பறக்கடிக்கின்றது.

கனம் டி. எச். கொத்தலாவல எம். எல். சி.:-தலைக்கு மிகவும்உயர்ந்த தைலமென நேத்திரானந்த தைலத்தை நான் யாவருக்கும் சிபார்சு செய்கிறேன்.

கனம் ஏ. எவ். மொலமூரே எம். எல். சி.:—தலைவலி கண்வலி முதலியவைகளைக் கண்டிப்பதில் நேத்திரானந்த தைலத்திற்கு இணையென்பதே கிடையாது.

கனம் ஏ. எஸ். விக்கிரமனயக்கா எம். எல். சி:—நேத்திரானந்த தைலம் பலதடவைகளில் எனது தலை நோயைப் போக்கியிருக்கிறது.

கனம் சி. இ. விக்டர் கொரியா எம். எல். சி:—கடுமையான தலைவலிகளையும் கூட உடனே நிவர்த்தி செய்யும் திறமை நேத்திரானந்த தைலத்திற்குண்டு.

கனம் டி. எம் சபாரத்தினம் எம். எல். சி.:—உங்களது நேத்திரானந்த தைலம் ஓர் வரப்பிரசாதம் போன்றது.

கனம் சி. இ. டி வாஸ் எம். எல். சி:—நான் பல வாரங்கள் உங்களது நேத்திரானந்த தைலத்தை உபயோகித்தேன். கண்களுக்கும் மூளைக்கும் அளவிறந்த நன்மையை அது கொடுக்கிறது.

கனம் என் எச் எம் அப்துல்காதர் எம் எல் சி:—தலை, நேத்திரங்கள் சம்பந்தப்பட்ட பலவிதமான வியாதிகளையும் நேத்திரானந்த தைலம் திட்டமாகக் கண்டிக்கிறது.

கனம் எச் எம் மக்கான் மரைக்காயர் எம் எல் சி:— உங்களது நேத்திரானந்த தைலம் மிகவும் உயர்ந்தது என்பதில தடையேயில்லை. ஜனங்கள் யாவரும் அதையே வாங்குகிறார்கள்.

கனம் எவ் ஏ உபயசேகரா எம் எல் சி:–நேத்திரானந்ததைலம் தலைக்கும் மூளைக்கும் ஆனந்தமான குளிர்ச்சியைக் கொடுக்கிறது.

கனம் C. H. Z. பெர்னாண்டோ எம் எல் சி:– நேத்திரானந்த தைலம் எனக்கு அளவற்ற நன்மைகள் செய்துள்ளது.

கனம் எச் ஏ பி சந்திரசேகரா, கே சி, எம் எல் சி: —நேத்திரானந்த தைலம் விலையற்ற மாணிக்கம் என நான் கருதுகிறேன்.

இலங்கையில் மட்டுமின்றி, உலகம் முழுமையும் முக்கியமாக இந்தியா, பர்மா, ஆஸ்திரேலியா, மலேயா முதலிய நாடுகளில் இத்தைலம் பிரக்யாதி பெற்றிருக்கிறது. தலை, கண் முதலியவைகளின் சகலவிதமான நோய்களுக்கும் இணையற்ற மருந்து சக்தியற்ற, எரிச்சலுடன், சிவப்பேறியிருக்கும கண்களை உடனே குணப்படுத்தும். சதை படர்ந்திருப்பது, இமைகளில் உண்டாகும் ரணங்கள், மங்கலானபார்வை, குறுகியபார்வை, சாளேஸ்வரம் நீர்வடிதல், தலைவலி முதலிய பலவிதமான நோய்களையும் குணப்படுத்தும். மூளைக்கு குளிர்ச்சியளித்து தேகத்தை அழகுடன் வளர்த்து தலையிலுள்ள சொட்டைகளையும் நீக்கும். தலைவலியை ஐந்தேநிமிஷங்களில் தீர்த்துவிடும்.

விலாசம்:—

**வேதமுதலியார். டப்ளியு. டானியல் பெர்னாண்டோ**
**வைத்தியசேகர.**

"ஸ்ரீ வைத்திய வளவுப" பானதுறை. காலில் ஹோட்டல், கண்டி.
பௌத்த மந்திர வைத்தியசாலை, நோரிஸ் ரோட், கொழும்பு.

Q 91. 4- 7 - 35. to 3 - 10 - 35.

# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி.

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 129777 00.

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப்பணங் கட்டுமுறை.

பங்கொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சமயத்திலும் 500 ரூபாவிற்குக் குறையாமல் இருக்குமானால் 3 விகித வட்டியுடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாகும்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதம், 8 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" பாங்கியிலும் "இம்பீரியல்" பாங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப்பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வசதியான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறும் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும், ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகபாகமாகக் கொடுக்கலாம். (இத்தகைய கடனையும் பாகம் காணி ஈடாக வைத்துக்கொண்டு பிணையுடன் கடனெடுக்கலாம். பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

சி. செல்லப்பா.
மானேஜர்.

(Y. 152. 21-11-34—20-11-35) (ஐ)

# N. வைத்திலிங்கம் & கம்பெனி

பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்

கட்டிடங்களுக்குவேண்டிய முதல்தரமான சாமான்கள்.

ஜெர்மனி, ஜப்பான், டச்சு
முதலியவிடங்களில் செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள
சிமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள்
வர்ணங்கள், வார்னிஷ், கொழுக்கி ஓடுகள்
இன்னும் கட்டிடத்திற்குரிய சகல சாமான்களும்
எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால்
சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE:
**38, 3rd Cross Street,**
**Colombo.**

**Telephone No. 30.**

(Y. 56. 8-2—7-2-36) ஐ

அரசாங்க அதிகாரிகளும் கவர்ன்மெண்டு மந்திரிகளும் தலைமைவகித்து நடத்திய பற்பல மெடிக்கல் கான்பரன்ஸ்களில் முதற்தர தேசிய அவுஷதங்களெனத் தங்க மெடல்களும், வைத்தியபதி, வைத்திய ஆசிரியர் பட்டங்களும் பெற்றிருப்பதோடு இதர பெருங்காக்ஷி சாலைகளிலும் மருந்துகள் வைக்கப்பட்டு மெரிட் சர்ட்டிபிக்கெட்டும் தங்கமெடல்களும் பெற்றிருக்கிறது.

பாரத நாட்டில் பழமையும் தன்மையும்




பெற்ற வைத்தியசாலை இதுவே.

வீரியவிர்த்திக்கும், ஆண்டன்மைக்கும், இரத்தவிர்த்திக்கும் சி. எம். சாமி, மன்மத குளிகை:—இணையற்ற மாத்திரையென யாவராலும் புகழப்பெற்று எண்ணிக்கையிலா நூட்களை வந்தகொண்டிருக்கும் ஒப்புயர்வற்றது. மாதர்கள் மனதைத் திருப்பிபண்ணும் மாண்பு வாய்க்குமென்றால் இதைப்பற்றி அதிகம் விளக்குவானேன். இது மேகச்சூடு, வெட்டை, ஆண்மைக்குறைவு, நரம்புத் தளர்ச்சி, தேப்பு தாகம் முதலியவைகளை நீக்கும். 20-குளிகை விலை ரூபா 2.

கேர்ப்ப எண்ணெய்:—இது ஸ்திரீகள் சஞ்சீவி யென்று சொல்லலாம். மாதாந்தர வயிற்றுவலியை உடனே நிறுத்தும், சரியாய்ப் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், பிள்ளைப்பை, இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பமுண்டாகும். மிக்க அநுபவமானது. புட்டி 1க்கு விலை ரூ 2—0—0

பிரமேக நிவாரணி:—எந்த மருந்தினும் தீராத எவ்வளவு நாட்பட்டதாயினும் இதில் நிச்சயமாய்த் தீரும். பிரமேகம், இரத்தமேகம், தந்திமேகம், வெட்டை, நீர்ச்சுருக்கு, நீர்க்கடுப்பு, குத்தல், எரிச்சல், நீரடைப்பு, முதலியன மூன்றுவேளையில் குணமாகும். புட்டி 1க்கு விலை ரூ. 2 0 0.

மாந்தரீக சத்து:—மஹானருள் உலகமெங்கும் கீர்த்திவாய்ந்த இச்சத்தை அணிந்து கொண்டால் சகல வசியம், தனலாபம், இஷ்டத சாரிபசித்தி, புத்திரசந்தானம், உத்தியோகவுயர்வு உண்டாகும். இன்னும் செய்வினை பேய் பிசாசு குழந்தைகளுக்குண்டாகும் பிணி, திருஷ்டி முதலியன நீங்கும். மறுபடி காணுது. புட்டி 1க்கு விலை ரூபா 2—0—0. தபால் சார்ஸ் வேறு.

குறிப்பு:—ஏராளமான நற்சாட்சிகளை விபரமான கியாட்லாக்கில் பார்க்கவும். பினாங்கு, சிங்கப்பூர், மோரிஸ், நெட்டால், தென் ஆபிரிக்கா முதலிய பிறதேசவாசிகள் முன்பணம் அனுப்பவேண்டும். வி. பி. சிஷ்டமுள்ள பிறதேசவாசிகள் ரூபா 5—0—0 அட்வான்சுடன் ஆர்டர் அனுப்பவேண்டும்.

(Q. 49. 9-5 to 8-8-35.) மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.

## புகையிலைக்குப் பசளையிடுவது

சரியான முறையில் பசளை யிடுவதினால் மாத்திரமே ஏராளமான பயிரையும் திறமான சாதி இலையையும் பெற்றுக்கொள்ளலாம்.

கொழும்பு கொம்மேர்சல் கம்பனியாரின் புகையிலைப் பசளைக் கலவையைச் சரியான முறையாகப் பாவித்தால் விசேஷ லாபகரமான ஆதாயத்தைக் கொடுக்கும்.

முழு விபரங்களும் இன்னும் வேண்டிய புத்திமதிகளை இலவசமாக அறிந்துகொள்வதற்கும், கொழும்பு கொம்மேர்சல் கம்பனி லிமிற்றெற், கொழும்பு என்றவிலாசத்துக்கு எழுதவும்.

(H. 50 13-5 to 12-11-35.) ஐ

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சுலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுத்லிலி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரகபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிகை வகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்த காமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டு வந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரை ருத்தலுக்கு ரூபா பத்து கால் ருத்தலுக்கு ரூபா ௫. தபால் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாய் இராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததனால் முன் மணிஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவரூான் ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
காத்தான்குடி போஸ்று,
மட்டக்களப்பு.

(Y. 55 1-1-34 to 31-12-35) சிலோன்

# பவுண்மார்க் ஓடுகள்.

| | |
|---|---|
| மலிவு நிறைந்த | பொலிவு நிறைந்த |
| அழகு மிக்க | புகழ்வு மிக்க |
| ஓசை கொண்ட | உயர்வு கண்ட |
| கனங் குறைந்த | காய்வு தந்த |
| கசிவில்லாத | சூடு கொள்ளாத |
| பவுண்மார்க் | ஓடுகள் இவைகளே. |

இவை எம்மிடமன்றி வேறெவரிடத்தும் கிடைக்காதன வென்பதை மறவாதீர்.

தனிவசண்டு: சி. வீரகத்திப்பிள்ளை அண்டு சன்ஸ்
யாழ்ப்பாணம், பருத்தித்துறை,
வல்வெட்டித்துறை, காங்கேயன்துறை.

சப்ஏசண்டுகள்: ஆறுமுகம்பிள்ளை, காரைநகர்.
பி. ம. தம்பியோ, ஊர்காவற்றுறை.

N. B. மேற்குறித்த இடங்களில் மேற்குறித்த ஆட்களிடமே பெறலாம்.

மற்றெவரிடத்தும் இந்தஓடுகள் இல்லை.

**Phonoe No 93.**

(Y. 57 1-5-35 to 30-4-36.)

## வாலிபம் வேண்டுமா?



அப்படியெனில்
இம் மருந்தைக்
கொள்மின்!

வயோதிகத்திலும் பார்க்கக் கடனே உமது முகத்தைத் திரைக்கப்பண்ணிக் கிழவனுக்குகின்றது. கடினவேலையிலும் பார்க்க, பணவிஷயமான துன்பங்களே சீக்கிரத்தில் உமது வாலிபத்தைப் போக்குகின்றது. தேகசுகமும் மனச்சாந்தியும் நீர் பெறவேண்டுமானால், சேமநிதியிற் பணத்தைப் போடுதலால் எமக்குப் பாதுகாப்புண்டு என்ற உணர்ச்சி வரவேண்டும். அதுவே உமக்குப் பெருந்துன்ப நிவாரணமாம்.

அவசியக சந்தர்ப்பத்திற்கும், வருவாய் குறைந்த, அல்லது நின்றகாலத்திலும் தயாராயிருப்பது நீங்கள் எண்ணுகிறபடி கஷ்டமல்ல. உங்கள் செலவோடு செலவாய் எம்மிடம் பணத்தைச் சேமியுங்கள். நாங்கள் உதவிசெய்கிறோம்.

கோய்லன்வங்கி லிமிற்றெட்,
யாழ்ப்பாணம்.

Y. 71 23-5 to. 22-5-36

வியாபாரத்திற்கழகு

# விளம்பரஞ் செய்தல்.

அதற்குகந்தது இந்துசாதனமே.

வான்முகில்வழாதுபெய்க மலிவளஞ்சுரக்கமன்னன், கோன்முறையரசுசெய்க குறைவிலாதுயிர்கள்வாழ்க,
நான்மறையறங்களோங்க நற்றவம்வேள்விமல்க, மேன்மைகொள்சைவநீதி விளங்குகவுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on the behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna at their Press, Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on Monday the 15th July 1935.